

கொலம்பியா
புதிய
வெளியீடு
கான ஸரஸ்வதி
D.K.பட்டம்மாள்
பாடிய
GE.6240
சித்தம் எப்படியோ
(நாதநாமக்ரிய)
இன்னம்தயவு
(ரீதிகௌளை)
ஸ்ரீமதி
M.L.வஸந்த
குமாரி
பாடிய
GE.6313
ஸரஸி ஜநப முராரே
(தோடி) 2 பாகங்கள்
ஸ்ரீமதி
கமலா
கிருஷ்ணமூர்த்தி
பாடிய
GE.6306
அபயகாத்தை
கிண்கிணிநாதம்
(சிந்துபைரவி)
ஸரஸ்வதி ஸ்டோர்ஸ்.
மதராஸ்.2


சேதமின்றி சலவை
செய்யப்பட்டது
அதோடு ஸன்லைட்டால்
வெண்மையாக்கப்பட்டது
—ஜாஸ்தி அழுக்குப்
படிந்த இடங்கள் உள்பட
உங்கள் ஆடைகளில் பழுக்கத்தான் சேதமடையுமிடங்களை கவனியுங்கள்! இவைதான் ஜாஸ்தி அழுக்குப்படியும் பாகங்கள். ஆடைகளை, சிறிது சோப்பைத்தேய்த்து தண்ணீரில் நனைத்து. அடித்துத் துவைப்பதால் அதிகமாக கெட்டுப்போகக் கூடிய இடங்களும் இவையே.
உங்கள் துணிகளை ஸன்லைட் முறைப்படி சுத்தம் செய்து அடித்துத் துவைப்பதனாலேற்படும் நாசத்தை விலக்குங்கள்.
ஸன்லைட்டின் ஏராளமான சுலபமாக இயல்கிற நுரையை, நனைந்த துணியில் புகுத்திக் கசக்கினுல் அதிகமாக அழுக்குப்படிந்துள்ள இடங்கள் கூட தூய வெள்ளையாகிறது. இச்சுத்தமான சோப் உங்கள் துணிகளுக்கு நன்மையளிக்கிறது—அவைகளுக்கு இறகைபோந்த அழகைக் கொடுக்கிறது. அன்றியும் உங்கள் கைகளை மிருதுவாகவும், மழமழப்பாகவும் வைத்துக்கொள்ளுகிறது.
இது
ஸன்லைட் முறைப்படி
சுத்தம் செய்தது!
SUNLIGHT
SOAP
ஸன்லைட்
சோப்
S. 60-23 TM
LEVER BROTHERS (INDIA) LIMITED

கல்கி

பொருளடக்கம்

மலர் 6 | இதழ் 6

1946 செப்டம்பர் 8

விய ஆவணி 23

ஸ்ரீமதி அருணா ஆஸப் அலி என்னும் வீர நாரீமணி சமீபத்தில் தமிழ் நாட்டில் சுற்றுப் பிரயாணம் செய்து சொற்பொழிவுகள் ஆற்றிச் சென்றதை நேயர்கள் அறிவார்கள். அத்தகைய வீரப் பெண்மணிகள் நமது தென்னாட்டிலும் இல்லாமற் போகவில்லை. அவர்களில் முக்கியமான ஒரு ஆந்திர சகோதரி நமது அட்டையை இந்த இதழில் சிறப்பிக்கிறார்.

1930-ம் வருஷத்தில் மகாத்மாவின் தண்டி யாத்திரை ஒரு புறமும், ராஜாஜியின் வேதாரண்ய யாத்திரை ஒரு புறமும் நாடெங்கும் என்றுமறியாத தேசிய எழுச்சியை உண்டாக்கிக் கொண்டிருந்தபோது, சென்னை நகரையும் அந்த எழுச்சியின் ஆவேசம் தாக்கியது. சென்னை நகரில் நடந்த உப்பு சத்தியாக்கிரஹப் போரில் முன்னணியில் நின்று போலீஸாரின் கூர்த்தண்ட அடக்குமுறைகளை எதிர்த்துத் தேசமெல்லாம் வியக்கும்படி தீரத்துடன் போராடி அழியாப் புகழ் பெற்றவர் ஸ்ரீமதி துர்க்காபாய்.



உப்பு சத்தியாக்கிரஹப் போராட்டம் ஒருவாறு முடிவடைந்த பிறகு ஸ்ரீமதி துர்க்காபாய் கலாசாலையில் சேர்ந்து படித்துத் தேறிச் சட்டப் பரீட்சையும் கொடுத்து பி. எல். பட்டம் பெற்றார். கோர்ட்டில் வக்கீல் தொழில் நடத்தவும் ஆரம்பித்தார். ஆயினும் அந்தத் தொழில் அவருக்கு மனச் சாந்தி அளிக்கவில்லை. எனவே, மாதர் குலத்தின் தொண்டுக்குத் தமது வாழ்க்கையை அர்ப்பணம் செய்யத் தீர்மானித்து ஆந்திர மஹிளா சபையை ஆரம்பித்தார். அந்த சபையின் ஆதரவில் கலாசாலைகளில் சேர்ந்து படிக்க வசதியில்லாத பெண்களுக்கு உயர்தரக் கல்வி அளிக்கத் தொடங்கினார்.

ஆந்திர மஹிளா சபையை அவர் ஆரம்பித்துச் சிறிதுகாலத்துக்குள் அவர் செய்த அற்புதமான மாதர்குல சேவை பலருடைய உள்ளத்தைக் கவர்ந்தது. மேற்படி ஸ்தாபனத்துக்குச் சொந்தக் கட்டிடம் கட்டுவதற்காகப் பணம் வந்து குவிந்தது. காந்தி மகான் தமிழ் நாட்டுக்கு விஜயம் செய்தபோது அவருடைய ஆசி பெற்ற அஸ்திவாரக் கற்கள் ராஜாஜியினால் நாட்டப்பெற்ற வைபவத்தைப் பற்றி நேயர்கள் படித்திருப்பார்கள். அஸ்திவாரக் கற்கள் நாட்டப்பெற்ற இடத்தில் இப்போது அழகிய கட்டிடங்கள் நிற்கின்றன.

ஸ்ரீமதி துர்க்காபாய் சென்னைச் சட்டசபையினால் அரசியல் நிர்ணய சபைக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கும் 49 பேரில் ஒருவராவார். இந்தச் சிறப்புக்கு அவர் எல்லா வகையிலும் தகுதி உடையவர் என்பதில் ஐயமில்லை. பெண்குலத்துக்காக ஸ்ரீமதி துர்க்காபாய் செய்து வரும் ஒப்பற்ற தொண்டுகள் நாளுக்கு நாள் சிறந்தோங்கட்டும்.

கல்கி

மலர் 6 | தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 6

என்ன செய்தி?

ளறிக் கெடுத்தல்!

"நரி வலமாகப் போனால் நல்லதா,
இடமாகப் போனால் நல்லதா?" என்று
கட்டதற்கு, "வலமாக வேணுமானு
லும் போகட்டும்; இடமாக வேணு
ானாலும் போகட்டும்! மேலே விழுந்து
பிடுங்காமல் போனால் போதும்!" என்று
சான்ன கதை ஞாபக மிருக்கிற
ல்லவா? சென்னைப் பிரகாசம் சர்க்கார்
காண்டு வந்திருக்கும் விட்டு வாடகைக்
ட்டுப்பாடு மசோதா மேற்கண்டபடி
மலே விழுந்து பிடுங்கும் மசோதாவா
ிருக்கிறது. யுத்தம் முடிந்து எத்த
னயோ நாள் ஆகியும் இன்னும் காலி
ான வீட்டை வாடகைக்கு விடலாமா,
டாதா என்று சர்க்காரிடம் அநுமதி
கட்க வேண்டுமாம். வாடகை சம்பந்த
ான விதிகளோ இன்னும் மோச
ானவை. "சாமான்களின் விலைகளையும்
ட்டு வாடகையையும் அதிகப்படுத்தக்
டாது" என்று சட்டம் செய்வதற்கு
ர்த்த முண்டு. ஆனால் இந்தப் புதிய
சோதாவோ வீட்டு வாடகையை அதிகப்
டுத்துவதற்காகவே ஏற்படுகிறது! அதி
யும் வியாபாரம் நடக்கும் கட்டிடங்
ளுக்கெல்லாம் 100-க்கு 100 பங்கு
ாடகையை உயர்த்திக் கொடுக்கிறது.
ாடகைக் கட்டிடங்களில் கடை வைத்
ிருக்கும் வியாபாரிகள் ஆயிரம் பதினாயி
க் கணக்கில் இருப்பார்கள். இவர்கள்
ற்கெனவே எத்தனையோ கட்டுப்பாட்டு
ிதிகளுக்கு உட்பட்டு அவஸ்தைப்படு
றார்கள். கடை வைத்திருக்கும் கட்டி
ங்களின் சொந்தக்காரர்களோ விரல்
ிட்டு எண்ணக் கூடியவர்கள்; லட்சாதி
திகளான முதலாளிகள். இந்தப்
பரும் பணக்காரர்கள் ஒரு சிலரின்
ாபத்துக்காக ஆயிரக் கணக்கான
த்தியதர வியாபாரிகளின் நன்மை
யப் புதிய மசோதா பலி கொடுக்
றது. "சும்மாக் கிடந்த சங்கை ஊதிக்
கடுத்தானாம் ஆண்டி!" என்னும்
முமொழிக்கு இதைத் தவிர வேறு
தாரணம் தேடவேண்டியதில்லை!

சென்னை நரகம்

சென்னை நகரமானது சுமார் மூன்று வார காலம் சென்னை நரகமாக இருந்து வந்தது. வீதிகளில் குப்பையும் கூளமும் குவிந்து கொண்டுவந்தன. எல்லாவற்றையும் சகிக்கும் வாயுபகவானே மூக்கைப் பிடித்துக் கொண்டு உலாவ நேர்ந்தது. எந்தச் சமயம் காலரா முதலிய கொள்ளை நோய்கள் தோன்றிப் பெருவாரியான உயிர்களைக் கொள்ளை கொள்ளுமோ என்று சென்னை நகர மக்கள் பீதி கொண்டிருந்தார்கள். இவற்றுக்கெல்லாம் காரணம் சென்னை நகர சுத்தித் தொழிலாளரின் வேலை நிறுத்தம்தான் என்று சொல்ல வேண்டியதில்லை. நகர சுத்தித் தொழிலாளர்கள் "எங்களுக்குச் சம்பளம் போதவில்லை!" என்று வேலை நிறுத்தம் செய்தார்கள். நகர சபை அதிகாரிகள் "சம்பளம் அதிகமாக்க முடியாது!" என்று பிடிவாதம் பிடித்தார்கள். இந்த நிலைமையைப் பிரகாசம் சர்க்கார் பார்த்து, குண்டாந்தடி சமேதராய் மலபார் போலிஸை அனுப்பி வேலை நிறுத்தத்தை முடிக்கப் பார்த்தார்கள். இடைநடுவில் சுகாதார மந்திரி கனம் டேனியல் தாமஸ் விளக்குமாறு எடுத்து வீதிகளைப் பெருக்கிக் காட்டிய போது மேற்படி நாடகம் நகைச் சுவையின் சிகரத்தை அடைந்தது. நகர சுத்திக்காரர்கள் "ரொம்ப சரி; மந்திரிமார்கள் தெருக் கூட்டட்டும்! நாங்கள் மந்திரி வேலை பார்க்கிறோம்!" என்று சொல்லலானார்கள். ஒரு வயது முதிர்ந்த தொழிலாளி ஸ்திரீ தடியடியாலோ, தடியடியாலோ, அல்லது தன்னாமையினால் தானோ பிராணனை விட்டபோது நாடகம் சோக சிகரத்தை அடைந்தது.

நல்ல வேளை

மேற்கண்டவாறு சென்னைப் பட்டணத்தை நாற அடித்த நகர சுத்தி வேலை நிறுத்தம் நல்ல வேளையாகச் சென்ற வாரத்தில் முடிவடைந்தது. பொது

ஜனங்கள் தலையிட்டு மத்தியஸ்தம் பண்ணி அதை முடிவு செய்து வைத்தார்கள். சமரச நிபந்தனைகளின்படி, மாதம் பதினைந்து ரூபாய்க்குக் குறைவான சம்பளக்காரர்களுக் கெல்லாம் சம்பளம் பதினைந்து ரூபாயாக உயர்த்தப்படுமாம். அதற்கு மேற்பட்ட சம்பளக்காரர்களுக்கு மாதம் மூன்று ரூபாய் உயர்த்தப்படுமாம். இதைத் தவிர **வீட்டு வாடகை அலவன்ஸ் ரூபாய் இரண்டு** எல்லாருக்கும் அளிக்கப்படுமாம்! இத்தகைய சமரச நிபந்தனைகளின் பேரில் நகர சுத்தித் தொழிலாளிகள் ஜய கோஷம் செய்து கொண்டு வேலைக்குத் திரும்பினார்கள். நகரவாசிகளும் நன்றாக மூச்சு விட்டார்கள்.

லோபித்தனம்

மனிதர்கள் செய்யக்கூடிய தொழில்களுக்குள்ளே '**மிகவும் உயர்ந்தது**' என்று மகாத்மாவினால் கருதப்படும் தொழில் தோட்டித் தொழில்; மற்ற சாதாரண மனிதர்களால் மிகவும் அருவருப்பான தொழில் என்று கருதப்படுவதும் அது தான். பூமிக்கடியிலுள்ள சாக்கடைகள் சங்கமமாகும் கூவம் நதிக்குப் பக்கத்தில் போகவே நம்மால் முடிகிறதில்லை. அத்தகைய பெருமையைக் கூவம் நதிக்கு அளிக்கும் சாக்கடைகளில் இறங்கி, மூச்சுப் பிடித்து முழுகி, அடைந்துகிடக்கும் அசுத்தங்களை எடுக்கும் வேலையைத் தோட்டிகள் செய்கிறார்கள். அப்படிப்பட்ட வேலையைச் சென்னை நகரில் செய்யும் தொழிலாளிகளுக்குப் பதினைந்து ரூபாய்க்குக் குறைவான சம்பளம் கொடுக்கப்படுகிறதென்றால் அதைவிட லோபித்தனத்தை நாம் கற்பனை செய்யவும் முடியாது! அவர்களுக்குக் கேவலம் மூன்று ரூபாய் சம்பள உயர்வும் இரண்டு ரூபாய் வீட்டு வாடகையும் கொடுக்க மறுத்து, அதன் காரணமாக வேலை நிறுத்தம், விளக்குமாற்று ஊர்வலம் முதலியவை ஏற்படக் காரணமாயிருந்தவர்களைப் பற்றி நாம் என்ன சொல்வது?

காரணம் யார்?

எல்லாக் கேடுகளுக்கும் பொது உடைமைக் கட்சியார்மீது பழி சுமத்துவது இப்போது வழக்கமாயிருந்து வருகிறது.


வேறு சில தொழிலாளர் வேலை நிறுத்தங்களுக்குப் பொது உடைமைக்காரர்கள் காரணமாயிருக்கலாம்.

ஆனால் இந்த நகர சுத்தி வேலை நிறுத்தத்துக்குப் பிரகாசம் சர்க்காரின் கையினாலாகாத்தனத்தைத் தவிர வேறு காரணம் எதுவும் சொல்ல முடியாது.

இத்தகைய வேலை நிறுத்தம் ஏற்படவே இடங்கொடுத்திருக்கக்கூடாது. தொழிலாளரின் உண்மையான குறைகளை ஆரம்பத்திலேயே விசாரித்து நியாயம் செய்திருக்க வேண்டும்.


அப்படி அவர்களுக்கு நியாயமான குறைகளே இல்லை,—வேலை நிறுத்தம் அநியாயமானது,— என்பது உண்மையானால், இவ்வளவு ஆர்ப்பாட்டத்துக்குப் பிறகு அவர்களுக்குச் சம்பளத்தை உயர்த்தி மறுபடி வேலைக்கு எடுத்துக் கொண்டிருக்கக் கூடாது.

சர்க்காரின் இத்தகைய முன் யோசனையற்ற, திறமையற்ற, வலிமையற்ற காரியங்களினால்தான் பொது உடைமைக் கட்சியார் பலம் பெற்று வருகிறார்கள்.



பொதுஜனத்தின் வெற்றி

\- உம்மன்



காண்பது கனவல்ல!

சென்ற செப்டம்பர் 2உ. காலையில் வழக்கம்போல் கீழ்த்திசையில் உதித்த சூரியனை உதயமாகும்போது கவனித்தவர்கள் ஒரு புதிய பளபளப்பையும் பரபரப்பையும் கண்டிருப்பார்கள். அன்று காலை உதயமாகும் விஷயத்தில் சூரியன் கொஞ்சம் அவசரப்பட்டுக் கடிகாரத்தைத் திருப்பி வைத்திருக்கலாமோ என்று கூடச் சந்தேகப்பட்டிருப்பார்கள்.

அன்று சூரியன் வழக்கத்தைவிட அதிக பிரகாசம் கொண்டிருந்ததற்கும் அவசரப்பட்டதற்கும் தக்க காரணம் இருந்தது. இரண்டாயிரம் வருஷமாக இந்தப் பாரத தேசத்தில் காணாத காட்சியைக் காணப்போகிறோம் என்ற எண்ணந்தான் காரணம். இமயமலையிலிருந்து கன்னியாகுமரி வரையில் இந்தியா தேசம் ஒரே சுதந்திர ராஜ்யமாகக் காட்சி யளிக்கப் போகிறது என்ற ஆவலே காரணம்.

இன்னும் கூர்ந்து உற்றுப் பார்த்தவர்களுக்குச் சூரியனுடைய கிரணங்களிலே அன்று ஆரஞ்சு, வெள்ளை, பச்சை நிறங்கள் பளிச்சென்று விளங்கியதும் புலப்பட்டிருக்கலாம். ஜனாப் ஜின்னாவின் கோபத்துக்குப் பயந்து கொண்டு சூரிய பகவான் கறுப்புக் கொடியினால் முகத்தை மறைத்துக் கொண்டோ முக்காடு போட்டுக் கொண்டோ கிளம்பவில்லை. ஹிந்துக்களின் ஆரஞ்சு நிறம், முஸ்லிம்களின் பச்சை நிறம், மற்ற சமூகங்களுக்காக வெள்ளை நிறம் ஆகிய மூன்று வர்ணங்களும் பளிச்சென்று சோபிக்கும்படி தேஜோமயமாக உதயமானார்.



இப்படிக் குதூகலமான பரபரப்புடன் உதயமான போதிலும் வானவெளியில் மேலே ஏற ஏறக் கொஞ்சம் குழப்பமும் கவலையும் சூரிய பகவானைப் பிடிக்கலாயிற்று.

உண்மையாகவே இந்தியா சுதந்திரத்தை அடைந்து விடப் போகிறதா, நிஜமான சுயராஜ்யம் ஏற்படப் போகிறதா என்று மனம் தனியாய்த் தவித்தது. "பிரிட்டிஷாராவது, மனதார இந்தியாவின் ஆட்சியை இந்தியர்களிடம் ஒப்படைத்து விடவாவது?" என்ற சந்தேகம் அடிக்கடி உண்டாயிற்று. அதிலும், பிரிட்டிஷாரின் தொன்று தொட்ட வழக்கம் சூரியனுக்குத் தெரிந்த விஷயமல்லவா?


"இந்த இங்கிலீஷ்காரர்கள் பட்டப் பகலிலேயே இப்படி ஊரைக் கொள்ளையடிக்கிறார்களே, இராத்திரியில் என்ன செய்வார்களோ?" என்ற பயத்தினாலேதான் சூரிய பகவான் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் அஸ்தமிப்பதே இல்லை என்பது பிரசித்தியான விஷயம் அல்லவா?

எனவே, சூரிய பகவான் அன்று தயக்கத்துடனும் மயக்கத்துடனும் தான் மேலே ஏறிக்கொண்டு வந்தார். கடைசியில் உச்சி வானத்துக்கு வந்து கீழே புது டில்லி மாளிகையை நோக்கியபோது மறுபடியும் அவருக்குத் தாம் காணும் காட்சி கனவிலே தோன்றும் காட்சியோ, உண்மையாகக் காணும் காட்சிதானா என்ற சந்தேகம் ஏற்பட்டது.

இருபத்தாறு வருஷத்துக்கு மேலாக பிரிட்டிஷாருடன் இடைவிடாமல் போராடிய தீரர்,—ஒன்பது தடவை பிரிட்டிஷ் சட்ட திட்டங்களை மீறிச் சிறைச்சாலை புகுந்தவர்,—பத்து வருஷம் இரண்டு மாதம் பிரிட்டிஷ் சிறைச்சாலைகளில் கைதியாக இருந்து காலங் கழித்தவர்,—அத்தகைய பண்டித ஜவாஹர்லால் நேரு அல்லவா புதுடில்லி சர்க்கார் மாளிகையில் வீற்றிருந்து இந்தியாவின் அரசாங்கப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறார்? அவரைப் போலவே வாழ்நாளெல்லாம் பிரிட்டிஷ் சர்க்காருக்குப் பரம விரோதிகளாயிருந்து போராடிச் சிறையில் பல வருஷங்களைக் கழித்த



சர்தார் படேல்



ராஜாஜி



ராஜேன்பாபு

ஸர்தார் படேல், பாபு ராஜேந்திரர் முதலியவர்கள் அல்லவா வைஸ்ராய் வேவலிடமிருந்து இந்தியாவை ஆளும் அரசாங்க அதிகாரத்தை ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்!

ஸூர்ய பகவான் சிறிது நேரம் பேச்சு மூச்சற்று நின்று அந்த அதிசயக் காட்சியைப் பார்த்தார். தாம் காண்பது கனவல்ல, உண்மையாகக் கண் முன்னே நடக்கும் காட்சிதான் என்று நிச்சயம் செய்து கொண்டார். பின்னர் "இனிமேல் பிரிட்டிஷ் ஸாம்ராஜ்யத்தைப் பற்றிய கவலை நமக்கு வேண்டியதில்லை; இந்த ஸாம்ராஜ்யத்தில் நாம் அஸ்தமித்தாலும் அஸ்தமிக்கலாம், அஸ்தமிக்காமல் இருந்தாலும் இருக்கலாம்!" என்று மனத் திருப்தியுடன் தமது வானமண்டலப் பிரயாணத்தை மேலும் தொடங்கினார்.

o o o

தமிழ் நாட்டின் தீர்க்க தரிசனம் வாய்ந்த மகா கவியான பாரதியார் முப்பது வருஷத்துக்கு முன்னால், சுதந்திர ஸூரியனின் ஒரு சிறு கிரணத்தின் அறிகுறிகூடக் கீழ் வானத்தில் காணாதிருந்த சமயத்தில், — அடக்குமுறை என்னும் கரிருள் நாலா பக்கமும் சூழ்ந்திருந்த காலத்தில்,

"ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே
ஆனந்த சுதந்திரம் அடைந்து
விட்டோம்!"

என்று ஆடிப் பாடினார்.

"சங்குகொண்டே வெற்றி ஊதுவோமே
தரணிக்கெல்லாம் எடுத்து
ஓதுவோமே!"

என்று பறைசாற்றினார்.

"ஜயமுண்டு பயமில்லை மனமே!"

என்று உறுதி கூறினார்.

"ஜய பேரிகை கொட்டடா!"

என்று முழக்கம் செய்தார்.

பாரதியாரின் வாழ்நாளில் இதை யெல்லாம் 'கவியின் கனவு' என்பதாகவே ஜனங்கள் கருதினார்கள். பாரதியார் அவ்விதம் கருதினாரோ தெரியாது; அவர் சுதந்திர உதயத்தைக் காணாமலேயே காலமானார்.

பிற்பாடு, தேசபந்து தாஸ், வி. ஜே. படேல், மோதிலால் நேரு, லாலா லஜபதி ராய், நமது தமிழ்நாட்டு வ. உ. சிதம்பரனார், தீரர் சத்தியமூர்த்தி ஆகிய தேசபக்த சிம்மங்களும் அவ்விதமே சுதந்திர உதயத்தைக் காணாமலே காலமானார்கள்.


காந்திமகான், சர்தார் வல்லபாய், ஜவாஹர்லால்ஜி முதலியவர்களின் ஜீவிய காலத்திலேயும் இந்திய சுதந்திரம் ஒரு கனவாகவே இருந்து விடுமோ என்ற சந்தேகம் நம் எல்லாருடைய உள்ளத்திலேயும் குடிகொண்டிருந்தது. இவர்களுக்கு அடுத்த தலைமுறையில் வரக்கூடிய இனந் தலைவர்கள் இல்லையே என்பதை எண்ணிப் பார்த்தபோது நமது கவலை அதிகமாயிற்று. காந்திமகான், ஜவாஹர்லால் முதலியவர்களுடைய காலத்துக்குப் பிறகு சுதந்திரம் வந்து



சரத் போஸ்



பலதேவ்சிங்



ஆஸப் அலி



ஜகஜ்ஜீவன்



டாக்டர் ஷாபத்

தான் என்ன பிரயோஜனம் என்றுகூட நம்மில் அநேகர் எண்ணினோம். இவர்களுடைய காலத்திலே சுதந்திரம் வந்தால் இந்தியா தேசம் எல்லாவிதங்களிலும் முன்னேற்றமடையும்; உலகத்தின் முன்னிலையில் இந்திய தேசத்தின் கௌரவம் உயர்ந்து நிற்கும்; பாரதத் தாய் தலை நிமிர்ந்து நிற்பாள்.

காந்தியைப் போன்ற மகாபுருஷர், ஆயிரம் வருஷத்துக்கு ஒரு முறைதான் அவதரிக்க முடியும். ஜவாஹர்லால்ஜி, வல்லபாய், ராஜாஜி போன்றவர்கள் நூறு வருஷத்துக்கு ஒரு முறைதான் ஒரு தேசத்தில் தோன்றுவார்கள். இவர்களுடைய காலத்தில் இந்தியா சுதந்திரம் அடைந்து இவர்களே அரசாங்க நிர்வாகத்தை ஒரு பத்து வருஷம் அல்லது ஐந்து வருஷ காலமாவது நடத்தினால், அடைந்த சுதந்திரம் நிலையாக ஸ்தாபிதமாகும். பல நூற்றாண்டுகளாகக் கொடிய வறுமையிலும் அறியாமையிலும் அழுந்திக் கிடக்கும் இந்தியாவின் கோடிக் கணக்கான மக்களை நல்ல முறையில்,—நேரான வழியில்,— உயர்ந்த நிலைமைக்குக் கொண்டு வரலாம். மக்களின் தேகசுகத்துக்கும் பண்பாட்டுக்கும் நல்வாழ்வுக்கும் சந்தோஷத்துக்கும் தக்க முறையில் பலமான அஸ்திவாரம் போட்டு மாளிகையை எழுப்பலாம். அஸ்திவாரத்தைச் சரியானபடி அமைத்து விட்டால் அப்புறம் மேல் கட்டடத்தைக் கொஞ்சம் முன்பின்னாகக் கட்டினால் கூடப் பாதகமில்லை. பிற்பாடு திருத்தியமைத்துக் கொள்ள முடியும். ஆனால் அஸ்திவாரத்தையே கோணலும் மாணலுமாகவும் தக்க பலமில்லாமலும் அமைத்து விட்டால் அப்புறம் மாளிகை எவ்வளவு அழகாகக் கட்டினால்தான் என்ன? எப்போது என்ன நேருமோ, எங்கே பிளக்குமோ என்ற திகிலோடுதானே காலங்கழிக்க வேண்டும்?

ஆகையினால்தான் காந்தி மகான், ஜவாஹர்லால்ஜி முதலியவர்களுடைய காலத்திலேயே இந்தியா சுதந்திரம் அடைந்துவிட வேண்டுமென்ற ஆவல் நமக்கு அபரிமிதமாயிருந்தது. ஒரு வேளை வராமல் போய்விடுமோ என்ற பயமும் அதிகமாயிருந்தது. ஏற்கனவே மூன்று தடவை கையில் வந்து விட்டதுபோல் தோன்றிய சுதந்திரம் கடைசி நிமிஷத்தில் கைநழுவிப் போய் விட்டபடியால் நாம் பயப்படுவதற்குக் காரணம் இருந்தது. செப்டம்பர் 2உ நெருங்க நெருங்க நமது கவலை உச்ச நிலையை அடைந்து கொண்டிருந்தது. சென்ற இதழில் "உலகத்துக்கொரு புதுமை" என்று நாம் எழுதிய போது கூட, அந்தப் புதுமை உண்மையிலேயே நடக்க வேண்டுமே என்ற கவலை இல்லாமற் போகவில்லை.



டாக்டர் மத்தாய்



ஸி. எச். பாபா

கடைசியாக, செப்டம்பர் 2உ அந்த "உலகத்துக்கொரு புதுமை" நடந்தே நடந்து

விட்டது. பண்டித ஜவாஹர்லாலும் அவருடைய சகாக்களும் புது டில்லி அரசாங்க மாளிகைக்குச் சென்ருர்கள். வைஸராய் வேவலிடமிருந்து இந்திய அரசாங்கத்தின் பூரணப் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டார்கள்.

* * *

உலக சரித்திரத்திலேயே ஒரு மகத்தான சம்பவம் செப்டம்பர் 2உ புது டில்லியில் நிகழ்ந்தது என்பதில் சந்தேகமில்லை. அது எவ்வளவு மகிமை வாய்ந்தது என்பதை இந்திய மக்கள் இன்னும் உணரவில்லை என்றே சொல்ல வேண்டும்.

வானளாவிய கோபுரத்தைக் கீழே இருந்து பார்ப்பவர்கள் அதன் உன்னதத்தை உணர முடியாமல் திகைத்து நிற்பதுபோல் நிற்கிருர்கள் பலர்.

காண்பது உண்மைக் காட்சியா அல்லது கனவா என்ற சந்தேகம் இன்னும் சிலருக்குத் தீர்ந்தபாடில்லை.

சந்தேகம் தீர்ந்து தெளிந்தவர்களும் தேசிய சர்க்கார் ஏற்பட்டிருப்பதின் முக்கியத்தை நன்ருக உணர்ந்தவர்களுங்கூடத் தங்களுடைய சந்தோஷத்தையும் குதூகலத்தையும் வெளியிலே காட்டிக்கொள்வதற்கு ஒரு காரணத்தினுல் தயங்குகிருர்கள்.

அந்தக் காரணம், முஸ்லிம் லீக் தலைவர்கள் புதிய சுதந்திர அரசாங்கத்தில் சேரவில்லையென்ற காரணத்தினுல் இந்த நாட்டு முஸ்லிம்களில் பெரும்பாலோர் மனவருத்தம் அடைந்திருப்பதுதான்.

மேற்படி காரணத்தை முன்னிட்டே, "நமது குதூகலத்தை அதிகமாகக் காட்டிக் கொள்ள வேண்டாம்!" என்று மகாத்மா காந்தியும் கட்டளையிட்டிருக்கிருர்.

அந்தக் கட்டளையை நாம் சிரமேற் கொண்டு நடப்போம்.

அடுத்த 1947-ம் வருஷம் செப்டம்பர் 2உக்குள்ளே முஸ்லிம் சமூகத்தின் மனக் குறை தீர்ந்து முஸ்லிம் லீக் தலைவர்களும் சுதந்திர தேசிய சர்க்காரில் கலந்து கொள்வார்கள் என்று நம்பி விரும்புவோம்.

சுதந்திர இந்திய சர்க்கார் ஸ்தாபனத்தின் முதலாவது ஆண்டு நிறைவு விழா அடுத்த வருஷம் வரும்போது,— அந்த நன்னுளில்,— இமய மலையிலிருந்து குமரி முனை வரையில் மகத்தான கொண்டாட்டங்கள் நடைபெறும் என்று எதிர்பார்ப்போம்.

நிமிர்ந்து நில் அண்ணே!

"காட்டூர் கண்ணன்"

இண்டிரீமு கவர்மெண்டுன்னு இங்கிலீசுலே
என்னென்னமோ சொல்வதெல்லாம் இதுதான் கேளண்ணே!


1 சொந்தமாக நம்மநாட்டை நாமே ஆளவும்
சுருசுருப்பாய் வெள்ளைக்காரன் மூட்டைகட்டவும்
பஞ்சமின்னும் பட்டினின்னும் பட்டுனிமூமே — நம்
பச்சத்திலே நின்னு ஆளும் காலம்வந்தது!

2 கருப்புக்கொடி பிடிச்சு இப்போ கலாட்டாசெய்யும்
கட்சிகளைக் கண்டுநின்னு கலங்காதே அண்ணே!
பொறுப்பில்லாமே புரிந்திடாமே போடுங்கூச்சலால்
புரண்டுபோயி விழுந்திடாது நம்மராச்சியம்!

3 ஒத்துநின்னு வாழலான்னு 'ஊம்' என்று சொல்லி
உடும்பைப்போல உளுத்தபேச்சைப் பிடிச்சுக்கிருங்க!
எத்தினிநாள் சமாதானம் எடுத்துரைப்பாங்க?
இருக்கட்டுன்னு ராசாங்கத்தை நடத்தப்போருங்க!

4 மக்கள்மனை சுற்றம்வயல் மாடுகாடெல்லாம்
மங்களமாய்ப் பொங்கிநிக்கும் மகிமைவந்திருக்கு
நிக்குமோ இக்கஷ்டமெல்லாம் நீயேசொல்லிடு! — நாம்
நினைச்சபடி நடந்திடுச்சு _ நிமிர்ந்துநில்லண்ணே!

திருநாள் அலங்காரம்



செப்டம்பர் மீ 2உ இந்தியா தேசத்தில் முதன் முதலாகத் தேசிய சுதந்திர சர்க்கார் ஏற்பட்ட வைபவத்தைச் சென்னை சர்க்கார் "ஊர்வலம் பொதுக் கூட்டம் ஒன்றும் கூடாது" என்று தடை உத்திரவு விதித்துக் கொண்டாடினார்கள்! எனினும் அன்று நகரெங்கும் ஆயிரக் கணக்கான வீடுகளிலும் கடைகளிலும் தேசியக் கொடிகளைப் பறக்க விட்டுப் பொதுஜனங்களால் திருவிழாக் கொண்டாடப்பட்டது. தியாகராஜ நகரிலுள்ள தமிழ்ப் பண்ணைக் காரியாலயம் அன்று விசேஷ அலங்காரத்துடன் காட்சி அளித்தது.

கடவுளும் கனி கொள்வார்!

நாமக்கல் கவிஞர்

★ ★ ★

1 அச்சமற்ற வீரனுக் அறிவின்மிக்க பெருமையால்
அகிலதேச நேசமுற்ற ஆண்மையுள்ள ஜவஹரும்
கோர்மையற்ற நேர்மைவாழ்வு கொண்டெங்கும் யாவரும்
கும்பிடத் தகுந்தவல்ல பாய்படேலாம் தீரனும்
உச்சமாகும் கருணைவாழ்வில் உள்ளம்ஊன்றி நின்றிடும்
உயர்குணத்தின் பெயர்படைத்த ராஜன்பாபு ஒருவனும்
இச்சையற்ற கர்மயோகி இணையில் ராஜதந்திரி
'எங்கள் ராஜாஜி'யென்ற எவரும்போற்றும் தமிழனும்

2 சேர்ந்துசெய்யும் ராஜரீகம் நேர்ந்தஇந்த சேதான்
ஜெகநலத்தை மகிழ்வுகொள்ளச் செய்யவந்த புதுமையாம்
தேர்ந்தகல்வி அறிவுமிக்கு தீமைபாகும் யாவரும்
தேடிவந்து வாழ்த்துக்கூறும் தெளிவுபெற்ற. சண்டையால்
சோர்ந்துநிற்கும் உலகினுக்குச் சுகமுரைக்க வல்லதாய்
சுயநலத்தின் சூதுவாது சூழ்ச்சிஒன்றும் இல்லதாய்
கூர்ந்தபுத்தி. அன்பு. நேர்மை. திறமை. உறுதி கொண்டதாய்
குற்றமற்ற நீதிசெய்யக் குறைவிலாத கோஷ்டியாம்!

3 இமயம்தொட்டுக் குமரிமட்டும் ஏகராஜ ரீகமாய்
இந்தியாவின் மக்கள்யாரும் சொந்தஆட்சி என்னவே
சமயம். ஜாதி பேதம்என்ற சங்கடங்கள் விட்டதாய்
சரிசமான உரிமைபெற்ற சகலமான பேர்களும்
அமைதிஇன்ப வாழ்வுகண்டு அகிலலோக நாடுகள்
ஆசையோடு எமதுநட்பை அடையநாடும் அன்பினால்
நமதுதேசம் உலகினுக்கு நாகரீகம் காட்டவே
நல்லவர்கள் ஒன்றுசேர்ந்து நாட்டும்இந்த ஆட்சியாம்!

5 மனிதருக்குள் மனிதனென்னும் மகிமைபெற்ற மகரிஷி
மண்டலத்தில் கண்டிலாத தொண்டுசெய்யும் மன்னவன்
புனிதருக்குள் புனிதனென்ற வாழ்க்கையுள்ள புண்ணியன்
புன்மைவைக்கும் எண்ணிடாத கண்ணியத்தின் புகலிடம்
தனியன்கர்ம பக்திராஜ ஞானயோகத் தவசியாம்
தலைவர்எங்கள் காந்திஎன்ற கற்பகத்தின் தருவினுள்
கனிபழுத்த தென்றுசொல்லத் தக்கதிந்தக் காட்சியே!
கடவுளென்ற பொருளும்இன்று கனிபுசிக்க முன்வருமாம்!

★ ★ ★



ஜயபேரிகை கொட்டடா! — கொட்டடா!
ஜயபேரிகை கொட்டடா!

பயமெனும் பேய்தனை அடித்தோம்—பொய்மைப்
பாம்பைப் பிளந்துயிரைக் குடித்தோம்
வியனுலக னைத்தையும் அமுதெனநுகரும்
வேதவாழ்வினைக் கைப் பிடித்தோம் (ஜய)

இரவியின் ஒளியிடைக் குளித்தோம்—ஒளி
இன்னமுதினை உண்டு களித்தோம்
கரவினில் வந்துயிர்க் குலத்தினை அழிக்கும்
காலன் நடுநடுங்க விழித்தோம்! (ஜய)

காக்கை குருவி எங்கள் ஜாதி—நீள்
கடலும் மலையும் எங்கள் கூட்டம்
நோக்கும் திசையெல்லாம் நாமன்றிவேறில்லை
நோக்க நோக்கக் களியாட்டம்! (ஜய)

குறிப்பு:—செப்டம்பர் 11உ யன்று பாரதியார் திருநாள் சென்ற வருஷங்களைக் காட்டிலும் இந்த வருஷத்தில் தமிழ் நாடெங்கும் சிறப்பாகக் கொண்டாடப்படுமென்று நம்புகிறோம்.

கொண்டாட ஒரு மார்க்கம்

இந்தியாவிலே முதன் முதலில் தேசிய சுதந்திர சர்க்கார் ஏற்பட்டிருக்கிறது. இந்த மகத்தான வைபவத்தை எவ்வளவோ ஆர்ப்பாட்டமாகக் கொண்டாட வேண்டியது நியாயம். ஆனாலும் முஸ்லிம் லீக்கின் முரண்பாட்டினால்,—அவர்களுடைய மனம் நோகாமலிருக்கும் பொருட்டு,—நமது கொண்டாட்டத்தை ஓரளவு கட்டுப்படுத்திக் கொள்வது அவசியமாயிருக்கிறது.

எனினும் தேசிய சர்க்கார் ஸ்தாபனத்தைக் கொண்டாடுவதற்கு ஒரு நல்ல மார்க்கம்,—யாருக்கும் கோபமுண்டாக்காத வழி,—இருக்கிறது என்பதை ஞாபகப் படுத்துகிறோம். தேசிய சர்க்கார் ஏற்பட்டதின் ஞாபகார்த்தமாகத் திருச்சி தேசிய கலாசாலைக்கு ஒரு நன்கொடைத் தொகையை அனுப்பி வையுங்கள். கொண்டாட்டத்துக்குக் கொண்டாட்டம்; முன்னேற்றத்துக்கு முன்னேற்றம்; சிறந்த கல்விதானம் செய்த புண்ணியமும் உண்டு.

திருச்சி நேஷனல் காலேஜுக்கு நிதி வசூல் செய்யச் சென்னை நகரில் ஒரு கமிட்டி ஏற்பட்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். இதன் தலைவர் ஸ்ரீ என். எஸ். அருணாசலம் ஓ. பி. இ. ஐ. சி எஸ். அவர்கள். பொக்கிஷதார்: ஸ்ரீ எஸ். ஆர்எம். ஸிடி. ஏ அண்ணாமலைச் செட்டியார், (ட்ரோஜன் கம்பெனி), 45, தியாகராஜா ரோடு தியாகராய நகர், சென்னை. காரியதரிசிகள்: ஸ்ரீ கே. வெங்கட்ராமன் ஸ்டாக் அண்டு ஷேர் புரோக்கர், சென்னை; ஸ்ரீ எஸ். ரங்காராஜன் ஸப் எடிட்டர், "ஹிந்து", சென்னை.

உங்களுடைய நன்கொடையை மேற்படியார்களில் யாருக்காவது அனுப்பி வைக்கலாம். அல்லது நமக்கு அனுப்பினாலும் நிதியின் பொக்கிஷதாரிடம் சேர்ப்பித்து விடுகிறோம்.

மேற்படி நிதிக்குச் சென்னை நகரில் இதுவரை வசூல் விபரம் பின்வருமாறு:—

ஸ்ரீ எஸ். ஆர் எம். ஸி டி.ஏ. அண்ணாமலைச் செட்டியார், (மெஸர்ஸ் ட்ரோஜன் & கோ.,) சென்னை	ரூ. 5000—0—0
ராவ்பகதூர் எஸ்.கே. சுப்பிரமணிய ஐயர் (டைரக்டர், மெஸர்ஸ் கானன் டங்கர்லி லிமிடெட்) சென்னை	ரூ. 2000—0—0
ஸ்ரீ லால்சந்த் தாதா, (மெஸர்ஸ் தாதா & கோ., கெமிஸ்ட்ஸ் & டிரக்கிஸ்ட்ஸ்) சென்னை	ரூ. 1001—0—0
ஸ்ரீ என். எஸ். அருணாசலம், ஐ. ஸி. எஸ். ஓ, பி, இ.	ரூ. 1000—0—0
ஸ்ரீ ஆர். கிருஷ்ணமூர்த்தி, ஆசிரியர், "கல்கி" கீழ்ப்பாக்கம், சென்னை.	ரூ. 1000—0—0
ஸ்ரீ வி. எஸ். கிருஷ்ணஸ்வாமி (மெஸர்ஸ் வி. எஸ். கிருஷ்ணஸ்வாமி & கோ., ஸ்டாக் புரோக்கர்ஸ்) சென்னை	ரூ. 1000—0—0
ஸ்ரீ எஸ். ராமஸ்வாமி நாயுடு, (மெஸர்ஸ் ராம்லால் & கோ., ஸ்டாக் புரோக்கர்ஸ்) சென்னை	ரூ. 501—0—0
ஸ்ரீ கே. வெங்கட்ராமன், (மெஸர்ஸ். வெங்கடராமன் & கோ., ஸ்டாக் புரோக்கர்ஸ்) சென்னை	ரூ. 500—0—0
ஸ்ரீ எச். டி. ராஜா, (டைரக்டர் வான்கார்ட் இன்ஷூரன்ஸ் கம்பெனி) சென்னை	ரூ. 500—0—0
பாரத் புரோக்கர்ஸ், சென்னை.	ரூ 250—0—0
ஸ்ரீ எஸ். வரதாச்சாரி, அட்வகேட், மயிலாப்பூர்	ரூ. 250—0—0
ஸ்ரீ எஸ். ரங்காச்சாரி, அட்வகேட், மயிலாப்பூர்	ரூ. 200—0—0
ஸ்ரீ ஆர். வெங்கட்ராமன், அட்வகேட், மயிலாப்பூர்	ரூ. 200—0—0
ஸ்ரீ கே. எஸ். வி. சர்மா, ஸ்டாக் புரோகர், சென்னை	ரூ. 200—0—0





கைதியின் கேள்வி

கு. கணபதி

ஒருவித நினைவுமின்றி சிறைக் கூடத்தின் சிறிய ஜன்னலின் வழியாக அவன் வானத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான். அந்த வானம் ஒன்றுதான் அடிக்கடி மாறிக் கொண்டிருந்தது. அதைத் தவிர அவன் வாழ்க்கையிலும் சரி, சுற்றுச் சார்பிலும் சரி—ஒருவித மாறுதலும் இல்லை. அதைப் பார்த்துக் கொண்டிருப்பதிலேயே அவன் தன் காலத்தைக் கழிப்பான். நாளடைவில் அந்த வானமும் ஓர் உயிருள்ள வஸ்துபோல் அவனுக்குத் தோன்றியது. சில சமயங்களில் என்னவெல்லாமோ அதனிடம் பேசுவான். கடந்த பதினைந்து வருஷங்களாக அந்த அறையிலுள்ள எல்லா வஸ்துக்களிடமும் அவன் தன் உள்ளத்தையே அரித்துக் கொண்டிருந்த ஒரு குறையைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தான். 'குறை' என்றால் சாதாரணமான குறை அல்ல. அவன் எவ்வளவோ அலசி அலசி ஆராய்ந்து பார்த்தும் அதற்கு ஒரு தெளிவான முடிவைக் காண முடியவில்லை. உலகம் அவனுக்கு அநியாயம் செய்து விட்டது. ஏன்? காரணம் என்ன?—இதைத் தெரிந்துகொள்ள அவன் மிகவும் விரும்பினான். ஆனால் அதைத்தான் அவனால் தெரிந்துகொள்ள முடியவில்லை. அவன் பிடிக்கு அகப்படாமல் அது நிரந்தரமாக நழுவிக்கொண்டேயிருந்தது. ஆயிரம் ஆயிரம் தடவைகள் அதைப் பற்றிச் சிந்தித்தான்; யோசித்து யோசித்து அவதிப்பட்டான். ஆனால் முடியவில்லை.

"அவர்கள் என்ன வேண்டுமானாலும் சொல்லலாம். ஆனால் நான் பெரிய கறுப்பனைக் கொல்லவே இல்லை. நான் சொன்னதை அவர்கள் நம்பினார்களா?—இல்லை. அவர்கள் சொல்வதை மாத்திரம் நான் நம்புகிறேனா? இல்லை!—இருந்தாலும் அவர்களைப்போல் பொய் பேசுகிறவர்களை நான் கண்டதேயில்லை. அதிலும் கறுப்பு அங்கி போட்டுக் கொண்டு, நெட்டையாக, ஒல்லியாக, வழுக்கைத் தலையுடன் வந்தானே ஒரு ஆள், அவன் தான் படுமோசம். இத்தனைக்கும் காரணம் அவன்தான். கோர்ட்டு மத்தியில் ஆமாம், நடுமத்தியில் நான்தான் பெரிய கறுப்பனைக் கொன்றேன் என்று வெகு அழுத்தமாக வாதம்பண்ண ஆரம்பித்து விட்டான். அங்கே கோர்ட்டிலே கூட்டமோ சொல்லி முடியாது. எல்லோரும் கேட்டுக் கொண்டுதான் இருந்தார்கள்.

"அது சரி, அது அவனுக்கு எப்படித் தெரியும்? அவனுக்கு எப்படித் தெரிய முடியும் என்று கேட்கிறேன்? அவன் கொலை நடந்த இடத்தில் இல்லை. பெரிய கறுப்பனையும் முன்பின் பார்த்தது கிடையாது. அதைப் பற்றி நான் அவனைக் கேட்டபோது அவன் விழுந்து விழுந்து சிரித்தான் — அலட்சியமாக, அகம்பாவமாக. என்ன நினைத்துக் கொண்டானோ அவன் மனதில்! அப்பொழுது எனக்கு எப்படி இருந்தது தெரியுமா?

"கோர்ட்டிலே நிறுத்தி வைக்கிற வரையிலும் அவன் என்னைப் பார்த்ததே கிடையாது என்று சொன்னான். அப்படியானால், அவனுக்கு எப்படித் தெரியும், நான்தான் பெரிய கறுப்பனைக் கொன்றேன் என்று? அப்படியிருந்தும் நடுக் கோர்ட்டில் நின்றுகொண்டு நான் அவனை எப்படிக் கொன்றேன் என்பதை ஜட்ஜுக்கு விவரிக்க ஆரம்பித்து விட்டானே! நாலு நாள் அதையே விடாப்பிடியாகச் சொன்னானே? எமகாதகப் பயல்! நான்தான் கொலை செய்தேன் என்பதை நிரூபித்து விட்டான், ஐயா நிஜமாக நிரூபித்து விட்டான்! கெட்டிக்காரப் பயல்! அப்பட்டமாக அலசி அலசிச் சட்டத்தை அக்கு வேறு ஆணி வேராகப் பிய்த்து விட்டான், மணிப் பயல்! என் ஆயுளிலே அவனைப் போன்ற ஒரு அண்டப் புளுகனை நான் பார்த்ததே இல்லை!

"அவனிடம் நான் ஒரு பொய்யும் சொல்லவில்லை; ஒரு பொய்ச் சாட்சியும் சொல்லவில்லை. என் ஆயுசிலே ஒரு துரும்பைக்கூட நான் திருடினதில்லை — ஏதாவது, நான் பள்ளிக்கூடத்தை விட்ட நாளிலிருந்துதான் சொல்லுகிறேன்! அப்படியிருந்தும், கோர்ட்டுக்கு மத்தியிலே எழுந்து நின்றுகொண்டு, கொஞ்சங்கூடத் தயங்காமல் அவன் பொய் சொன்னானே! அதை நினைத்தால்தான் என் மனதிலே அளவு கடந்த வேதனை உண்டாகிறது.

"பிறகு, ஜட்ஜ் என்னைத் தூக்கில் போடப் போவதாகச் சொன்னார். அப்படியாவது தூக்கில் போட்டார்களா? கடவுளறியச் சொல்லுகிறேன்—அப்படி செய்திருந்தால்கூடத் தேவலை. இத்தனை வருஷமாக இங்கே அவதிப்பட்டிருக்க மாட்டேன். ஏன் அப்படிச் செய்யவில்லை என்று யோசித்து யோசித்துப் பார்த்தாலும் புரியவில்லை. நான்தான் கொன்றேன் என்று அவ்வளவு திட்டமாகச் சொன்னார்களே, நான் செய்திருந்தால் என்னை ஏன் தூக்கில் போடவில்லை? எதற்காக இப்படி இரண்டுங்கெட்டானாக வைத்திருக்க வேண்டும்? நான் கொலை செய்யாவிட்டால் என்னைத் தூக்குப் போடுவதற்கு நியாயமில்லை. சரி, என்னைத் தூக்குப் போடவில்லை. அப்படியானால், இதிலிருந்து அவர்களுக்கும் சந்தேகமாக இருக்கிறது என்றுதானே அர்த்தம்?

"என்னைக் கேட்டால் பெரிய கறுப்பனை யாரும் கொல்லவே இல்லையென்று தான் சொல்வேன். அவன் அன்றைக்கு ஏதாவது ஒரு கப்பலில் கம்பி நீட்டி யிருப்பான் என்றுதான் நினைக்கிறேன். எனக்குத் தெரியும், அவன் அதைப் போலத்தான் செய்வான்! என்னை இதில் மாட்டிவிட்டு நான் திண்டாடுவதைப் பார்த்துச் சந்தோஷப்படுவான். அவன் எப்போதுமே இப்படித் தான். திடுதிப்பென்று அந்தப் பாழாய்ப் போன பாய்மரக் கப்பலில் ஏறிக் கொண்டு யாழ்ப்பாணத்திற்கோ, வேறு எங்கேயோ போய்த் தொலைந்தால் மாசக் கணக்காக ஆனாலும் யாருக்குத் தெரியும் அவனைப் பற்றிய தகவல்?"

இந்தச் சமயத்தில், யாரோ வரும் காலடிச் சத்தம் கேட்கிறது.

"ஓஹோ! வார்டர் வருகிறான். சாப்பாட்டு நேரமாகி விட்டது. எல்லாக் கதவையும் திறப்பான். இன்றைக்கு என்ன சமையல்? என்றைக்கும் போலத் தான். கீரைத்தண்டு குழம்புதான் இருக்கும். வேறு ஒன்றும் இருக்காது. நாளைக்கு மட்டும் என்ன? ஓஹோ! 631 ஒரு கத்தியால் எங்கள் முகத்தைச் சுரண்டுவான். 631 சொல்லுகிறான் — அவன் இங்கே வருவதற்கு முன்புகூட வெளியிலே பரியாரியாக இருந்தானாம்! ஹா ஹா ஹா! அப்படியிருந்தால், பாவம், அவனிடம் வழக்கமாக க்ஷவரம் பண்ணிக் கொள்கிறவர்களைப் பற்றி நினைத்தால் எனக்குப் பரிதாபமாக இருக்கிறது. அவன் பரியாரியாக இருந்ததால்தான் அவனிடம் க்ஷவரம் செய்து கொள்ளுகிற வர்கள் அத்தனை பேரும் ஒன்றுகூடி முடிவு செய்து அவனை இங்கே தள்ளி விட்டார்கள் போலும்!"

இந்தச் சமயத்தில் அறைக் கதவுகள் திறந்தன. கைதி சாப்பாட்டை வாங்கிக் கொண்டான். வார்டர் அறைக்குள்ளே வந்து கைதியைப் பார்த்து, "354! சாப்பிட்ட பிறகு நீ வெளியே போக வேண்டாம். அறையிலேயே இரு. ஜெயில் விசிட்டர் அப்பண்ண செட்டியார் வருகிறார். அவர் உன்னைப் பார்ப்பார்" என்றான்.

கைதி 'சரி' என்பதற்கு அறிகுறியாகத் தலை யசைத்தான்.



ஜெயில் விசிட்டர் ராவ்சாகிப் அப்பண்ணை செட்டியார் வந்தபோது, மறுநாள் விடுதலையாகப் போகும் அந்தக் கைதி ரொம்ப அமைதியாக இருப்பதைக் கண்டு அதிசயித்தார்.

"என்னப்பா, 354! சௌக்கியந் தானே?" என்று அவர் மிகவும் அனுதாபத்துடன் கேட்டார்.

"நாளைக்கு நீ வெளியே போவதற்குத் தயாராக இருக்கிறாயல்லவா? ஹா ஹா ஹா! இனிமேல் மறுபடியும் உன்னை இங்கே பார்க்கச் சந்தர்ப்பம் ஏற்படாது என்று நினைக்கிறேன்" என்றார்.

கைதி ஜன்னல் வழியாக ஆகாயத்தைப் பார்த்தான். பிறகு வெகு நிதானமாக, "அதெல்லாம் அவர்களைப் பொறுத்தது. அவர்கள் என்ன நினைக்கிறார்களோ! அடுத்தபடியாக என்னை என்ன செய்ய உத்தேசித்திருக்கிறார்களோ! பார்க்கப் போனால், ஆரம்பத்திலேயே என்னை நீங்கள் இங்கே பார்க்கும்படியான நிலைமையே ஏற்பட்டிராது. நிஜமாகச் சொல்லுகிறேன், நான் பெரிய கருப்பனைக் கொல்லவே யில்லை. உங்களுக்குத்தான் எல்லாம் தெரியுமே! நான் சொல்லியிருக்கிறேன் அல்லவா?"

"ஆமாம், அது இருக்கட்டும். இப்போது ... வெளியே போனதும் ... என்ன செய்யப் போகிறாய்? உனக்கு உறவினர் யாராவது இருக்கிறார்களா?"

"சொல்லுவதற்கில்லை. நான் இங்கே ரொம்பக் காலம் தங்கி விட்டதால் யார் இருக்கிறார்கள், யார் போனார்கள் என்று ஒன்றுமே தெரியாது. அநேகமாய் எனக்குத் தெரிந்தவர்கள் ரொம்பப் பேர் செத்துப் போயிருக்கலாம். பெரிய கருப்பன்கூட செத்துப் போயிருக்கலாம்."

"ஆமாம், உண்மை! நீ எங்கேயாவது ஒரு குறிப்பிட்ட இடத்திற்குப் போக வழியில்லை. போனவுடன் பார்ப்பதற்கு வேலையும் இல்லை. பாவம்! வேண்டுமானால் நான்........."

"இல்லை; ஒரு முக்கியமான வேலை எனக்கு இருக்கிறது......"

"ஓ, இருக்கிறதா? அப்படியானால் சரி, ரொம்ப சரி."

* * *

மறு நாள் கைதி விடுதலையானான். அவன் வழக்கம்போல் முன்பு பார்த்த துறையாக வேலையில் அமர்ந்து எப்போதும் போலவே வாழ்க்கையை நடத்த ஆரம்பித்தான். மூன்று மாதங்கள் கழிந்தன. பிறகு......

அவன் சட்டத்தையே தாக்கி விட்டான்! அது தலைகுப்புற விழுந்து திக்குமுக்காடி, திணறிக் கொண்டிருந்தது! நாட்டிலுள்ள ஒவ்வொரு 'சட்ட மூலை'யும் இண்டு இடுக்குகளெல்லாம் துருவித் துருவி ஆராய்ந்து ஏதாவது தப்புவதற்கு வழி கிடைக்குமா என்று அவதிப்பட்டுக் கொண்டிருந்தது. அ... கார வர்க்கத்தின் அகம்பாவத்தை அடி... வைத்த தன்மையில், எக்கச்சக்கமாக இரக்கமில்லாமல் அதன் முதுகுக்கு அவன் மண் காட்டி விட்டான்!

ஒரு நாள் கருப்புச் சட்டை யணிந்த அந்த கெட்டைப் பேர்வழியை (சர்க்கார் வக்கீல்) அகஸ்மாத்தாக அவர் பங்களாவுக் கெதிரில் சந்தித்தான். சர்க்கார் வக்கீலுக்கு அப்போது 'ஸர்' பட்டம் கிடைத்திருந்தது. அதெல்லாம் அவனுக்கு எப்படித் தெரியும்? அப்படியே தெரிந்திருந்தாலும் அது நிலைமையை பாதித்திருக்கப் போவதில்லை.

அவரிடம் போய், "எஜமான்! என்னைப் பற்றி அன்றைக்கு என்ன வெல்லாமோ சொன்னீர்களே, நினைவிருக்கிறதா?" என்று கேட்டான்.

அவர் அவனை ஏற இறங்கப் பார்த்தார். பிறகு சற்று யோசித்து, "தெரியவில்லையே.........எனக்கு........." என்று இழுத்தார்.

"நன்றாக நினைத்துப் பாருங்கள் பதினைந்து வருஷத்திற்கு முன் கோர்ட்டிலே ஜட்ஜுக்கு என்னைப் பற்றி எவ்வளவோ எடுத்துச் சொன்னீர்களே...!

வக்கீல் மீண்டும் கவனித்தார். அவருடைய பழைய நினைவுக் குவியலின் ஒரு மூலையில் ஒரு க்ஷணம் ஒரு நெருப்பு பொறியைப் போல ஒரு சித்திரம் நினைவுக்கு வந்தது.

"ஆமாம்! உம்...... வந்து......ஞாபகம் வருகிறது...அதாவது..."

"ஆமாங்க; அதுதான்! அதெல்லாம் தப்பு, முழுக்க முழுக்கத் தப்பு! நான் பெரிய கருப்பனைக் கொல்லவே யில்லை. நீங்கள் அவ்வளவு சொன்ன பிறகு கூடச் சொல்லுகிறேன். சத்தியமாக நான் அவனைக் கொல்லவில்லை. இன்னும் கொஞ்ச நாளில் அதை உங்களுக்கு நிரூபித்தும் விடுகிறேன். உங்களையும், அன்றைக்குக் கோர்ட்டில் இருந்துகொண்டு பிடிவாதமாக என் வார்த்தைகளை நம்பாத அத்தனை பேரையும் ஆச்சரியபடும்படி வைக்கிறேன், பாருங்கள்!"

"அட கடவுளே!" என்று தனக்குள் சொல்லிக் கொண்டு வக்கீல் ஆழ்ந்த பெருமூச்சு விட்டார்.

"அப்படியானால் நீ இப்போதுதான் வெளியில் வந்தாயா?"

"ஆமாங்க, எஜமான்!"

"ஏதாவது வேலை செய்கிறாயா?"

"ஆமா, செய்கிறேனுங்க!"

"அதுதான் நல்லது. இந்தா, இதை வைத்துக் கொண்டு நல்ல வேஷ்டி ஒன்று வாங்கிக் கொள்" என்று ஒரு ஐந்து ரூபாய் நோட்டை அவனிடம் நீட்டினார்.

"ரொம்ப வந்தனம், எஜமான்!" என்று பைக்குள் பணத்தை வைத்து விட்டு, "ஒரு சமாசாரம். நீங்கள் எனக்கு ஒரு யோசனை......?"

"ஆமா! என்ன விஷயம்?"

"நான் கொன்று விட்டதாகச் சொன்னீர்களே — பெரிய கறுப்பன் — அவனை நான் பார்த்தால்......ஒரு சமயம் பார்த்தால்......அதற்குமேல் நான் என்ன செய்வது......?"

வக்கீல் தனக்குள்ளாக ஏதேதோ முணுமுணுத்துக் கொண்டார். பிறகு, "சரி, அது ஒரு சிக்கலான விஷயந்தான்! அந்தமாதிரி சந்தர்ப்பம் ஏற்பட்டால் உடனே என்னை வந்து பார்! நான் இங்கேதான் என் ஆபீஸில் இருப்பேன்" என்றார்.

"ஏனென்றால், நான் குடியிருக்கிற இடத்தில் ஒரு ஆள் இருக்கிறான். அவன் ஒரு கப்பல் கம்பெனியிலே வேலை செய்கிறான். அவன் பெரிய கறுப்பனைப் பார்த்ததாகச் சொல்லுகிறான். எங்கே தெரியுமா? மலேயாவில் ரப்பர் தோட்டத்திலே!"

"சரி, அவனைப் பார்த்தால் அவசியம் கையோடு அழைத்துக் கொண்டு வந்து என்னைப் பார். என்னால் முடிந்த உதவியைச் செய்கிறேன்."

"அது இருக்கட்டும். ஆனால், அன்று கோர்ட்டுக்கு மத்தியிலே என்னை நிறுத்திக் கொலைகாரன் என்று எனக்குப் பட்டம் கொடுத்தவர்களை நான் என்ன செய்வது?"

"என்ன செய்வதாக நீ யோசனை பண்ணியிருக்கிறாய்?"

"பொய்யர்கள் என்று நிரூபித்து விடுவேன்! — ஆமாம், பொய்யர்கள்!"

"ஆமாம்...ஆமாம்! தாராளமாக..."

வக்கீல் தலையை ஆட்டிவிட்டுச் சிரித்துக் கொண்டே போய்விட்டார். அவர் வரையில் நல்லவர்தான். தங்கமான மனுஷன். கெட்டிக்காரர். ஆனால், 'சட்டரத்தம்' அவர் உடலில் முழுக்க முழுக்க ஓடிக் கொண்டிருந்தது. ஆகவே அவருடைய இதயமும், புத்திசாலித்தனமும் சட்ட வாதத்திற்கு அடிமைப்பட்டுக் கிடந்தது.

***

இது நடந்து அதிக நாளாகவில்லை. ஒரு நாள் அவர் தன்னுடைய சகாக்களுடன் அளவளாவிக் கொண்டிருந்தார். அங்கே, மூன்று பிரபல வக்கீல்களும், ஒரு ரிடையரான ஹைகோர்ட்டு ஜட்ஜும் இருந்தனர். வக்கீலின் காரியதரிசி அவரிடம் வந்து, "உங்களைப் பார்ப்பதற்காக வெளியில் ஒருவன் காத்துக் கொண்டிருக்கிறான். அவன் பெயர் பெரியசாமியாம். ரொம்ப முக்கியமான விஷயமாம். கூட இன்னொருவன் இருக்கிறான். அவனுடைய பெயர் பெரிய கறுப்பனாம்!" என்றார்.

"அட கடவுளே! எங்கே, இங்கேயா? பெரிய கறுப்பனா?" என்றார் வக்கீல்.

"ஆமாம், அவன் மிகவும் நடுங்கிக் கொண்டு நிற்கிறான்."

வக்கீல் தமது நண்பர்கள் பக்கமாகத் திரும்பி, "இது ரொம்பவும் ஆச்சரியமான வழக்கு. உங்கள் ஆயுசிலேயே வராத பிரச்னை. இதை நீங்கள் என்றும் மறக்க முடியாது. துறைமுகக்

அவரால் முடியாது!



"என்ன ஸார்! உங்கள் கம்பெனியில் வேலைக்கு நம் பையனைச் சிபார்சு செய்யக் கூடாதா!"

"சிபார்சாப் போச்சு, போங்கள்! நம்ம கம்பெனி சேர்மன் கிட்டே பிரம்மதேவனே வந்து சிபார்சு செய்தால் கூட முடியாது, ஸார்! ஆனால்... ஒன்று செய்யுங்கள்; நம்ம ஆராவமுத ஐயங்கார் இருக்காரோல்லியோ, அவரைப் பிடித்தீர்களானால் காரியம் முடிந்துவிடும்!"

கொலை வழக்கு ஞாபக மிருக்கிறதா? சுமார் பதினைந்து வருஷத்துக்கு முன் பெரிய கறுப்பன் என்பவனைக் கொன்று கடலில் போட்டு விட்டதாக வழக்கு. நான் சர்க்கார் தரப்பில் ஆஜரானேன். நீங்கள் — ஸர் குருசாமி — அப்போது ஜட்ஜாக இருந்தீர்கள். அவனுக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. அது ஆரம்பத்திலேயே எதிர்பார்த்ததுதான். கவர்னர் அதை ஆயுள் தண்டனையாகக் குறைத்தார். அதுவும் எதிர்பார்த்ததுதான். அவன் சமீபத்தில் விடுதலையாகி......"

அதற்குள் ஸர் குருசாமி தலையை யாட்டினார். மற்றவர்களும் அந்த வழக்கு ஞாபகமிருப்பதாகச் சொன்னார்கள்.

"இதோ, பெரியசாமி வந்திருக்கிறான்; பெரிய கறுப்பனும் வந்திருக்கிறானும்!"

"என்ன!" என்றனர் எல்லோருமாக.

அந்த வழக்கின் மற்ற விவரங்களையும் சொல்லிவிட்டு, அன்று பெரியசாமியை அகஸ்மாத்தாகச் சந்தித்ததைப் பற்றியும் சொன்னார் வக்கீல்.

"அவர்களை உள்ளே அனுப்பு!" என்று அவர் சொல்லுவதற்குள்ளாகவே, இருவரும் உள்ளே நுழைந்தனர்.

பெரியசாமி அறையைச் சுற்றி ஒரு முறை பார்த்துவிட்டு, "யார் இவர்களெல்லாம்?" என்றான்.

"என்னுடைய நண்பர்கள்தான்! என்னைப் போலவே அவர்களும் உனக்கு உதவியளிக்க ஆவலுடனிருக்கிறார்கள்!"

"எனக்கு எந்த உதவியும் தேவையில்லை!" என்று சொல்லிக் கொண்டே பெரிய கறுப்பனை அறைக்கு மத்தியில் இழுத்தான் பெரியசாமி.

"இந்தப் பயலைத் தேடிப் பிடிப்பதற்கு வெகு பாடுபட்டுவிட்டேன். கண்டு பிடித்த பிறகும் இவன் இங்கே வருவதற்கு இலேசில் சம்மதிக்கவில்லை. பிறகு உங்களைப் பற்றி ரொம்பவும் சொல்லி அழைத்து வந்தேன். இப்பொழுது நான் தங்களிடம் சொல்லுவதற்கு ஒன்றுமில்லை. எனக்குத் தலை சுற்றுவதுபோல் இருக்கிறது. நான் சொல்லுவது இதுதான்: அன்று கோர்ட்டில் இருந்த அத்தனை பேரும் 'நான்தான் கொலைகாரனென்று நிச்சயமாக முடிவு பண்ணினீர்கள். ஆயிரம் தடவை சொன்னேன், நான் பெரிய கறுப்பனைக் கொலை செய்யவே யில்லை என்று! உங்கள் காதில் ஏறவே யில்லை. அதிலும் நீங்கள்தான் ரொம்பவும் நிச்சயமாகச் சொன்னீர்கள். இந்தப் பயலை நான்தான் கொன்றேன் என்று சொல்லிப் பதினைந்து வருஷம்—ஆமாம், பதினைந்து வருஷம்—என்னை உள்ளே தள்ளினீர்கள். நானும் அதற்கான தண்டனையை முழுக்க முழுக்க அனுபவித்து விட்டேன்" என்று சொல்லி விட்டுப் பெரியசாமி ஒரு நீண்ட பெருமூச்சு விட்டான்.

அடுத்த நிமிஷம் 'என்ன ஆகுமோ' என்று எல்லோரும் பீதியுடன் பெரியசாமியைப் பார்த்துக் கொண்டிருக்கும் போதே, அவன் தன் சட்டைப் பையிலிருந்த கத்தியை எடுத்துப் பெரிய கறுப்பனை ஒரே குத்தாகக் குத்திக் கொன்று விட்டான்!

அவ்வளவுதான்; அங்கிருந்த சட்ட நிபுணர்கள் அத்தனை பேரையும் நோக்கி "எந்தக் கொலைக் குற்றத்திற்காக நான் பதினைந்து வருட காலம் சிறை வாசம் அனுபவித்தேனோ, அந்தக் கொலையை இதோ செய்து விட்டேன்!—இப்போது என்ன செய்யப் போகிறீர்கள்?" என்று ஒரு எக்கச்சக்கமான கேள்வியைப் போட்டுவிட்டுப் பெரியசாமி சிங்கத்தைப் போல் கர்ஜனை செய்து நின்றான்.

அவனுடைய கேள்விக்கு யாரும் பதில் சொல்லாமல் மௌனம் சாதித்தார்கள்.



லோத்ரா

கர்ப்பாசய ரோக நிவாரணி

லோத்ரா பல்லாண்டுகளாக இந்தியப் பெண்டிர்களுக்கு விசுவாசத்துடன் சேவை புரிந்து நம்பிக்கை வாய்ந்த கர்ப்பாசய ரோக நிவாரணி என்ற புகழையும் ஸ்தாபித்துக் கொண்டுள்ளது.

லோத்ரா கவர்ச்சி மிக்க ஆரோக்கியத்தையும் சக்தியையும் அளிக்கிறது.

கேஸரி குடீரம் லிமிடெட்

மதராஸ்

ஒரிஸ்ஸா, நிஜாம், ஆந்திர ஜில்லாக்கள், தமிழ் நாடு, பெர்ஹாம்பூர், செகந்திராபாத், பெஜவாடா, மதுரை முதலிய இடங்களுக்கு ஏஜண்டுகள்:

ஸீதாராமா ஜெனரல் ஸ்டோர்ஸ்

செகந்திராபாத் - பெஜவாடா - மதுரை




நித்தம் நித்தம் நிலைக் கண்ணாடிமுன் நீண்ட நேரம் நின்று முகத்தில் விதவிதமான பவுடர்களையெல்லாம் பூசிக்கொண்டு, கூந்தலை எவ்வளவோ விதமாக சிங்காரம் செய்து கொண்டும் ஏதோ ஒரு குறை தோன்றத்தான் செய்கிறது.

கடைசியில் ஐடெக்ஸ் (Eyetex) கண் மையை உங்கள் கண்களில் தீட்டிக்கொண்டதும்தான் உங்கள் வதனம் கவர்ச்சி தரும்.

ஐடெக்ஸ் கண் மை உங்கள் கண்களுக்கு குறுகுறுப்பான பார்வையையும் முகத்திற்கு கவர்ச்சியையும் அளிக்கிறது. ஐடெக்ஸ் ரஸாயன முறைப்படி தயாரிக்கப்பட்டது. கண் எரிச்சல் அற்றது. இது நாகரிக நங்கையர்க்கும் குழந்தைகளுக்கும் இன்றியமையாதது.

மதராஸ் சிடியிலும் வெளியூர்களிலும் எல்லா ஷாப்புகளிலும் கிடைக்கும்.



AN ARVIND LABORATORIES PRODUCT

Trade Enquiries To:

PUSHPAVANAM STORES

TRIPLICANE : MADRAS-5

வெளியூர் ஏஜண்டுகள்:

திருவாங்கூர் ஸ்டேட்:—என். ஏ. ரஹ்மான் பாரத் கெமிகல் இண்டஸ்ட்ரீஸ், தக்கலை

சேலம் & திருச்சிராப்பள்ளி ஜில்லாக்கள்:—ரத்னம் & கோ., 13 ஸ்வர்ணாம்பிகா அக்கிரஹாரம் சேலம். பம்பாய்:—வி. வி. நாயுடு, வேணுகாநந்தா ஸ்டோர்ஸ், 22-H, மஹாவீர் பில்டிங்ஸ், மாதுங்கா

வான சஞ்சாரம்

இசைத் தேனீ

'நமது சங்கீதம்' என்பதைப் பற்றிய 2-வது விமர்சனம் செப்டம்பர் 1ல் திருச்சி நிலையத்தில் நடந்தது. இக் காலத்திய கர்நாடக காமவர்த்தினி ராகமும், பண்டையத் தமிழ்ப் பண்சாதாரியும், வடநாட்டுப் பூர்வி ராகமும் பாடப்பட்டன. அவைகளின் வழக்க முறைகளில் வித்தியாச மிருப்பினும், உருவத்திலும் உணர்ச்சியிலும் அடிப்படை ஒற்றுமை யிருப்பதாக ஸ்ரீ டி. கே. ஜயராமய்யர் கூறினார். சென்ற மாதம் நடந்த சௌராஷ்டிரத்தைப் பற்றிய முதல் நிரூபணத்தில் கண்ட தெளிவும் ருசியும் போல் இத்தடவை காமவர்த்தினி விமர்சனத்தில் தென்படவில்லை. கலப்பு வளர்ச்சியினாலான ஹிந்துஸ்தானி முறைக்கும் கலப்பில்லாத கர்நாடக முறைக்கும் இடையே உள்ள ஒற்றுமையைப் பற்றி அபிப்பிராய பேத மிருக்கலாம். ஆனால் இக்காலத்திய கர்நாடக ராகங்கள் பெரும்பாலும், கர்ண பரம்பரையாக வந்த பண்டையத் தமிழ்ப் பண்களையே ஆதாரமாகக் கொண்டு, காலத்திற்கேற்ப பாணி மாறி, மேலுக்கு மேல் தனிமை பெற்று இப்போது இலங்குகின்றன என்பதை மறுக்க முடியாது. முந்நூறு வருஷங்களுக்கு முன் மேளகர்த்தா—ஜன்யம் என்று ராகங்களை வகுத்த வேங்கடமகியும் அவைகளைப் புதிதாகச் சிருஷ்டிக்கவில்லை. அப்போது நடப்பிலிருந்தவைகளையே வகை வகையாகத் திட்டப்படுத்தினார். ராமக்ரியா என்ற பூர்வீக ராகத்தைக் கடபயாதி ஒழுங்குக்காக காசிராமக்ரியா என்று பெயர் கொடுத்தார். பின்னர் அது காமவர்த்தினி என்ற பெயரையும் கொண்டது. நடப்பு முறையில் காமவர்த்தினி, பந்துவராளி ராகங்களின் உருமாறிக் குழப்பம் ஏற்பட்டு விட்டது. அது இன்னும் தீரவில்லை. புதுப் பெயர் கொடுத்து விட்டால் அது தீர்ந்து விடும் என்ற நம்பிக்கையில் சென்னை மியூஸிக் அகாடெமி மகாநாட்டு வாய்ச்சால நிபுணர்கள், பழைய பெயரான ராமக்ரியா வையே திரும்பக் கொண்டு வந்தார்களே தவிர குழப்பத்தைத் தீர்த்ததாகத் தெரியவில்லை.

"இக்காலத்தில் பல மேதை வித்வான்கள் அழகாய்த்தான் பாடுகிறார்கள். ஆனால் கமகப் பொழிவுடன் கர்நாடக சுத்தமாய் சங்கீதத்தைக் கையாளும் இரண்டொரு பெரிய வித்வான்கள் கலையில் காணும் பாவமும் அழகும் பிரத்யேகந்தான் ஸார்!" என்றார், 2ல் திருச்சியில் நிகழ்ந்திய காரைக்குடி ஸ்ரீ சாம்பசிவய்யரின் வீணைக் கச்சேரியை என்னுடன் அனுபவித்த ஒரு ஸீனியர் வித்வான். அவரது வீணாகானத்தைக் கேட்கக் கேட்க, கர்நாடக சங்கீதம் கரடு முரடல்ல, அன்னிய தனிமை சேர்ந்துதான் அதை நாகரிகப் படுத்த வேண்டுமென்பதில்லை என்ற தெளிவு வருகிறது. அதற்கு அத்தாட்சி அவர் அன்று வாசித்த பஹுதாரி யும் ஜனமனோரஞ்சனியுமே போதும். சங்கராபரணமும், பிலஹரியும் அவைகளின் தானங்களும் மேலும் அதை ஊர்ஜிதப்படுத்தின.

ஆகஸ்டு 29ல் திருச்சியில் நிகழ்ந்த பல்லடம் சஞ்சீவிராவின் புல்லாங்குழல் கச்சேரியும், சுத்த கர்நாடக ராகங்களின் தனிப் பெருமையை நன்கு வெளிப்படுத்தியது. அவரது வழக்கம் போல் எல்லா உருப்படிகளுக்கும் அவைகளின் ராக ஆலாபனைகளை முன்னதாகவும் ஸ்வரப்ரஸ்தாரங்களைப் பின்னதாகவும் வழங்கினார். பல்லவி ராகமாம் கேதாரகௌளை விஸ்தாரமாயும் மேல் கீழ் ஸ்தாயிகளில் அடுத்தடுத்துக் கொடுக்கும் நாத வேலைப்பாடுகளுடனும் சிறந்து விளங்கியது. தேவமனோஹரியை அடுத்தபடியாகச் சொல்லலாம். தவிர கேதாரம், தோடி, பேகட ராகங்களும் வளப்பு வடிவங்களாக விளங்கின. இனிமையும் கனிப்பும் கொண்ட குழல் நாதத்தினால் காதை நிரப்பி ராகங்களை வசீகரமாய்ச் சித்திரிப்பதில், சஞ்சீவிராவ் வயதானபோதிலும் அன்றைக்கும் இன்றைக்கும் மாறுதலில்லாத வன்மை படைத்திலங்குகிறார்.

*

27ல் சென்னை நிலையத்திலிருந்து கேட்ட சேலம் டி. செல்லமய்யங்கார், திருச்சியில் பாடிய அரியூர் கிருஷ்ணன் இவர்களது கானங்கள் குறிப்பிடத் தக்கவை. இருவரும் எளிதில் முன்னுக்கு வரக்கூடிய இளம் பாடகர்கள். முன்னவர் கனிப்பான சாரீரமும், சிறந்த உழைப்புடையும், அழகு பாணியும் கொண்டவர். 'ஓராஜூபு' கிருதி வெகு வளப்பாயிருந்தது. சில ராகங்களைத் தனி அழகுடன் பாடக்கூடிய அவருக்கு அன்று 'சாரங்கா' ஒன்றைத்தான் கொடுத்ததும், அதுவும் போதிய அவகாசமில்லாததும் புரோகிராமின் குற்றமே தவிர வேறில்லை. அரியூர் கிருஷ்ணனுக்கு நயசாரீரம். ராகங்கள், உருப்படிகள், ஸ்வரப்ரஸ்தாரம் எல்லாவற்றையும் வெகு சரளமாயும் நாஸூக்காயும் வழங்கினார். பிலஹரி, தோடி ராகங்கள் வெகு நயமாயிருந்தன.

30ல் சென்னையில் என். ராஜலக்ஷ்மி, எஸ். பி. ஹம்ஸதமயந்தி இவர்களின் கானங்கள் வசீகரமாயிருந்தன. இருவரும் மதுரமும் கனிப்பும் கொண்ட குரல் படைத்தவர்கள். முதல்வரது சக்ரவாகம், மத்யமாவதி ராகங்களும் உருப்படிகளும் கச்சிதமாயிருந்தன. பரத நாட்டியம் கற்றவர்கள் பாட்டில் பாவத் தெளிவு விசேஷமாயிருக்கும் என்பதை ஹம்ஸதமயந்தி நிரூபித்தார். மோஹனத்தில் 'இல்லை யென்பார் யாரடா' என்ற உருப்படியே அதற்குச் சான்றாகும்.

31ல் திருச்சியிலிருந்து பெண் குரலோ என்று சந்தேகிக்கும்படி ஒரு இனிய குரல் கேட்டது. பெயரோ கந்தர்வ கோட்டை என். கிருஷ்ணமூர்த்தி என்று குறிப்பிடப்பட்டது. மத்யமாவதி கரஹரப்ரியா ராகங்களும், எட்டு ராகங்களின் பெயர் கொண்ட ஒரு ராகமாலிகையும், கவனத்தைக் கவர்ந்தன.

செப்டம்பர் 1ல் சென்னையில் என். நாக சுப்ரமணியத்துக்குக் கிடைத்த நேரம் 15 நிமிஷங்கள்தான். அதற்குள் ஹிந்தோளம், ஹம்ஸாநந்தி ராகங்களையும் உருப்படிகளையும் நயசாரீரத்தில் எளிதில் கவர்ச்சி கொடுக்கும் முறையில் பாடி வியக்க வைத்தார்.

அன்று அதே நிலையத்தில், கொத்தமங்கலம் ஸ்ரீநிவாஸன், ஸ்ரீ. ஸ்ரீநிவாஸனின் வயலின் பக்க வாத்தியத்துடன் செய்த கச்சேரியும் முதல் தரமாயிருந்தது.

தீராத கவலை!

என். கிருஷ்ணன்

முதலாளி தர்மராஜ் மிகவும் கவலையுடன் உட்கார்ந்திருந்தார். அனுபவமில்லாத தொழிலில் பல லட்ச ரூபாய்களை வாரி இறைத்து விட்டதில் அவருக்கு மிகவும் வருத்தம். அதுதான் தொலைந்து போகட்டும் என்றால் காட்டுத் தீபோல் பரவிவரும் இந்த நாசமாய்ப் போன 'ஸ்ட்ரைக்' இங்கேயும் வந்து புகுந்து விட்டால் என்ன செய்வது என்று நினைக்கும் பொழுது அவருக்கு ஒரே கிலி உண்டாயிற்று.

அதற்கேற்றாற் போல், "நமக்கும் குறைவில்லாமற் போகவில்லை; நாமும் 'ஸ்ட்ரைக்' செய்ய வேண்டியதுதான்!" என்று யாரோ தம்முடைய மில்லில் பேசிக் கொண்டதாக மில் மானேஜர் அவரிடம் சொல்லியிருந்தார்.

ஆகவே, அன்று காலை ஆபீஸுக்கு வந்ததும் வராததுமாக, "என்ன, மிஸ்டர் சங்கர்! நிலைமை எப்படி இருக்கிறது?" என்று மானேஜரைப் பார்த்துக் கேட்டார் தர்மராஜ்.

சங்கர் ஒரு குஷிப் பேர்வழி. முதலாளியைக் கொஞ்ச நேரம் ஆட்டி வைத்துப் பார்க்க வேண்டுமென்று அவருக்கு ஆவல். அதுவுமல்லாமல் தான் சாதித்த அவ்வளவு பெரிய காரியத்தைப் பற்றி அத்தனை சீக்கிரமாக முதலாளியிடம் சொல்லி விட்டால் அதில் என்ன ரசனை இருக்கிறது?

ஆகவே, "நிலைமையா! நாத்திரிதான் 'ஸ்ட்ரைக்' ஆயிற்று!" என்று ஒரு பெரிய வெடி குண்டைத் தூக்கிப் போட்டார்.

அதைக் கேட்ட முதலாளிக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. "என்னங்காணும்! அந்தப் பயல்களைச் சரிக்கட்டத் தெரியாத நீரும் ஒரு மானேஜரா? — அதெல்லாம் எனக்குத் தெரியாது. இந்த 'ஸ்ட்ரைக்'கை நீர் அடக்காமற் போனால் உம்மைத்தான் முதலில் 'டிஸ்மிஸ்' செய்வேன்!" என்று இரைந்தார்.

மானேஜர் வந்த சிரிப்பை அடக்கிக் கொண்டு, "இல்லை ஸார்! ராத்திரிதான் எனக்கு ஒரு யோசனை 'ஸ்ட்ரைக்' ஆச்சு! அதன்படி உடனே தொழிலாளர் சங்கத் தலைவரின் வீட்டுக்குச் சென்று ஒரு இரு நூறு ரூபாயை எடுத்து அவரிடம் கொடுத்துச் சரிக்கட்டி 'ஸ்ட்ரைக்' நடக்காமல் செய்துவிட்டேன்!" என்றார்.

இதைக் கேட்ட மாத்திரத்தில் முதலாளிக்கு ஆனந்தம் பொங்கிக் கொண்டு வந்தது. "மிஸ்டர் சங்கர்! அடுத்த மாதத்திலிருந்து உம்முடைய சம்பளத்தோடு ரூபாய் நூற்றைம்பது உயர்த்தியிருக்கிறேன்!" என்று சொல்லி மானேஜரைத் தட்டிக் கொடுத்தார்.


அதே சமயத்தில் அவரைத் தேடி ஒரு கடிதம் வந்தது. அந்தக் கடிதத்தில் பின் வருமாறு எழுதியிருந்தது:—

"முதலில் எங்களுக்கு 'ஸ்ட்ரைக்' செய்ய வேண்டும் என்ற எண்ணமே இல்லை. ஆனால் மானேஜரே வலுவில் வந்து, எங்களுடைய சங்கத் தலைவரை எங்களுக்கு விரோதமாக மாற்ற முயற்சி செய்ததால், அதைக் கண்டிக்கும் முறையில் இம்மாதம் 31-ந் தேதி யன்று நாங்கள் 'ஸ்ட்ரைக்' செய்யப் போகிறோம். தாங்கள் உடனே அந்த மானேஜரை வேலையிலிருந்து நீக்கினாலொழிய எங்கள் 'ஸ்ட்ரைக்' நிற்காது!

இப்படிக்கு,

வேலை நிறுத்தக் கமிட்டியார்."

அனுதாபம்!




கொசு (மூட்டைப் பூச்சியிடம்):— பாவம்! மனிதர்கள் எப்படித்தான் இந்த ரேஷன் அரிசியையும் கோதுமையையும் சாப்பிடுகிறார்களோ, தெரியவில்லை!

மூட்டைப் பூச்சி:— அதைப் பற்றி உனக்கு ஏன் இவ்வளவு அனுதாபம்?

கொசு:— அவர்களைப் பற்றி அனுதாபம் இல்லை. நான்தான் நாளுக்கு நாள் இளைத்துப் போய் வருகிறேன்.

—ஆர். சிதம்பரம்.

மகுடாபிஷேகம்



செப்டம்பர் 2ல் உலகமே பார்த்து அதிசயிக்கும் சம்பவம் புது டில்லியில் நடந்தது. வைஸராய்

எரிமலை வெடித்தது!

குமுறிக் கொண்டிருந்த எரிமலை குபீ ரென்று வெடித்தது.

அஷ்ட திக்குகளி லிருந்தும் அக்கினி ஜ்வாலைகள் சீறிக்கொண்டு கிளம்பின.

புரட்சிச் சண்டமாருதத்துடன் இரத்த மாரியும் சேர்ந்து கொண்டது.

ஆயிரக் கணக்கான வீரர்கள் போர் புரிந்து வீரசுவர்க்கம் எய்தினர். பதினாயிரக் கணக்கான குதிரைகளும் ஒட்டகங்களும் யானைகளும் மோதிக்கொண்டன. லட்சக் கணக்கான வாள்கள் உராய்ந்தன. நகரங்கள் தகனமாயின. இடிமுழக்கம் வானைப் பிளந்தது.

இதெல்லாம் 1857-ம் ஆண்டில் நடந்த முதலாவது இந்திய சுதந்திரப் போராட்டத்தின்போது நிகழ்ந்த சம்பவங்களாகும்.

மேற்படி மகத்தான போராட்டத்துக்கு மூலகாரணம் என்ன தெரியுமா?

கொழுப்பு!

என்ன? கொழுப்பா? யாருக்கு என்ன கொழுப்பு வந்தது?

ஆமாம்; கொழுப்புத்தான். இந்தியச் சிப்பாய்கள் உபயோகிக்கும் தோட்டாக்களின் கொழுப்பைத் தடவி அதைப் பல்லால் கடிக்கும்படி ஆங்கில அதிகாரிகள் உத்தரவிட்டார்களாம். அதனால்தான் சிப்பாய்க் கலகம் ஏற்பட்டதாம்!

1857-ம் ஆண்டில் நடந்த மேற்படி மகத்தான புரட்சிக்கு ஆங்கில சரித்திராசிரியர்கள் இப்படி ஒரு விசித்திரமான காரணத்தைக் கண்டுபிடித்து எழுதி யிருக்கிறார்கள்! ஆனால் அந்த விசித்திரமான காரணம் உண்மையான காரணம் அல்ல என்பது வீர சாவர்க்கார் எழுதிய * "எரிமலை அல்லது முதலாவது சுதந்திர யுத்தம்" என்னும் புத்தகத்தைப் படித்தால் நன்கு விளங்கும். மேற்படி புரட்சிக்கு உண்மைக் காரணம் என்ன வென்பதையும் அதன் விபரங்களையும் வீர சாவர்க்கார் சுமார் 450 பக்கங்களில் சாங்கோபாங்கமாகவும் சவிஸ்தாரமாகவும் எழுதியிருக்கிறார்.

பிளாஸி யுத்தத்தின் போதே, அதாவது மேற்படி புரட்சி யுத்தத்துக்கு நூறு வருஷங்களுக்கு முன்பே ஆங்கிலேயர்கள் வித்தை விதைத்து விட்டார்கள் என்பதில் ஆரம்பித்து, இந்தியாவில் ஆங்கிலேயர் ஆட்சி ஏற்பட்ட விபரத்தையும் அவர்களுடைய அக்கிரமச் செய்கைகளையும் அட்டூழியங்களையும் பற்றி விபரமாக வர்ணித்து எழுதி யிருக்கிறார்.

முதன் முதலாக ஆங்கிலேயர்கள் அப்போது அரசாட்சி புரிந்து வந்த டில்லி சக்ரவர்த்தி பகதூர்ஷாவைத் தங்கள் மோச வலையில் சிக்கவைத்து ராஜ்யத்தைக் கைப்பற்றியது, பிறகு சுதேச மன்னர்களிட மிருந்து கொஞ்சம் கொஞ்சமாக ராஜ்யங்களை அபகரித்தது, இந்து முஸ்லிம்களின் மத விஷயங்களில் தலையிட்டது முதலிய விபரங்களை ஆதியோ டந்தமாக விவரித்திருக்கிறார்.

ஆகவே, 1857-ம் வருஷத்துப் புரட்சிக்கு மூலகாரணம் கொழுப்பு அல்ல, மக்களிடையே தோன்றிய தேச விடுதலை உணர்ச்சி தான், அன்னியர் ஆட்சியில் ஏற்பட்ட வெறுப்புதான் என்பதை நிதர்சனமாக எடுத்துக் காட்டுகிறார்.

பிளாஸிப் போர்க்களத்தில் விதைக்கப்பட்ட விதையே நூறு வருஷ காலம் வளர்ந்து சிப்பாய்க் கலகமாக அறுவடை செய்யப்பட்டது என்று முடிவு கட்டுகிறார்.

ஆங்கிலேயர்களிடம் ராஜ்யங்களை இழந்த ராஜாக்களும், மகா ராஜாக்களும் மனம் புழுங்கிக் கொண்டிருந்தனர். அதே சமயத்தில் பிரிட்டிஷாரின் கீழிருந்த இந்தியச் சிப்பாய்களின் உள்ளங்களிலும் ஆங்கிலேயரின் அக்கிரமங்கள் காரணமாக ஆத்திரம் பொங்கிக் கொண்டிருந்தது.

இவ்வாறெல்லாம் இந்தியாவுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்குப் பழி வாங்க வேண்டுமென்று பொருமிக் கொண்டிருந்த ஜன சக்தியைத் தூண்டி விடும் பொருட்டு நல்ல சந்தர்ப்பத்தில் இரண்டு வீரத் திலகங்கள் தோன்றின. இவர்கள்தான் நானா சாஹிப் பேஷ்வாவும், வீர தீர ரமணியான ஜான்ஸி ராணி லட்சுமி பாயும்!



ஜெயமணி ஸா. சுப்பிரமணியம்

மக்களிடையே ஏற்பட்ட சுதந்திர உணர்ச்சியை வளர்த்து ஆங்கிலேயர்களுக்கு எதிராக ரகசிய ஸ்தாபனங்களைச் சிருஷ்டித்து, இந்தியச் சிப்பாய்களுக்கும், ராஜாக்களுக்கும் இரகசிய ஓலைகள் அனுப்பிப் புரட்சியை நடத்தத் தயார் செய்தார்கள்.

நானா சாஹிப், ராணி லட்சுமிபாயைப் போல் தாந்தியாதோபே, மங்கள் பாண்டே, அலி முக்கான் முதலிய ஒப்பற்ற வீர புருஷர்கள் பலர் தோன்றி மேற்படி இயக்கத்தில் பங்கெடுத்துக்கொண்டு தேசத்

---

* ஆசிரியர்: வி. டி. சாவர்க்கார்; தமிழாக்கியவர்: ஜெயமணி ஸா. சுப்பிரமணியம்; கிடைக்குமிடம்: சக்தி காரியாலயம், மயிலாப்பூர், சென்னை; விலை: ரூ. 3—0—0.

துக்கு மகத்தான சேவை செய்தார்கள். இவர்களுடைய முயற்சியின் காரணமாக முதன் முதலாக மீரத்தில் ஆரம்பமான புரட்சிப் பொறியானது நாடெங்கும் பரவி வானளாவ எழுந்தது.

பின்னர் டில்லி முற்றுகைகள், பிளாஸி அநீதிக்காக வாங்கிய பழி, கான்பூர் பலிகள், லக்ஷ்மணபுரி படு கொலைகள் முதலியவை நிகழ்ந்தன.

அப்புறம், கான்பூர் சிம்மாசனம் தகர்ந்தது. லக்ஷ்மணபுரி வீழ்ச்சியுற்றது. பரேலி சிம்மாசனம் பாழாயிற்று. ஆக்ராபுரி, ஜான்ஸி, பந்தா, பருகாபாத் சிம்மாசனங்களும் கொள்ளை போயின.

மேற்படி பயங்கரப் புரட்சிப் போராட்டத்துக்கு அயோத்தி, ரோஹில்கண்ட், பீகார், வங்காளம், பந்தல்கண்ட் முதலிய பல இடங்களும் குருக்ஷேத்திரமாக அமைந்தன.

இவ்வளவு ஆவேசத்துடனும் வேகமாகவும் பயங்கரமாகவும் இந்தியா வெங்கும் பரவி நின்ற புரட்சிக்கு இந்திய சரித்திரத்திலேயே வேறு உவமை யில்லை. அதிலும் தாய் நாட்டின் விடுதலைக்காக ஹிந்துக்களும் முஸ்லிம்களும் தோளோடு தோள் நின்று போர் புரிந்த சம்பவத்துக்கு ஈடு இணையே கிடையாது.

அத்தகைய ஒரு உக்கிரமான சண்டமாருதப் போராட்டத்தைக் குறித்து வீர சாவர்க்கார் தமது நெருப்பைக் கக்கும் வீர நடையில் வர்ணித்து எழுதியிருக்கிறார். மேற்படி புத்தகத்தைக் கையில் எடுத்து வைத்துக் கொண்டாலே போதும். நம்மையறியாமலே நமக்கு ஒரு வீரம் பிறக்கின்றது. மயிர் குத்திட்டு நிற்கின்றது.

புஸ்தகத்தைப் படிக்கும்போது ஆங்கில மொழி பெயர்ப்பு என்ற ஞாபகமே துளிக்கூட ஏற்படுவதில்லை. வீர சாவர்க்கார்தான் எழுதினார் என்பதையும் அடியோடு மறந்து விடுகிறோம்.

கீழ்வரும் வாக்கியங்களைப் படிக்கும் நேயர்கள் யாரானது இதைத் தமிழ் மொழி பெயர்ப்பு என்று சொல்ல முடியுமா? அல்லது தமிழ் வசன நடையை எவ்வளவு வீராவேசம் ததும்பக் கையாளலாம் என்பதை உணராமலிருக்க முடியுமா?

"ஹே, வீரத் தியாகிகளே! தாய் நாட்டின் சுதந்திரத்திற்காக சிகந்தர் பாக்கில் போரிட்டு வீர ஸ்வர்க்க மடைந்த திலகங்களே! உங்களை நாங்கள் மறவோம்; எக்காலத்திலும் மறவோம்! இதோ எங்கள் நன்றியைத் தெரிவிப்பதற்காக இந்தச் சரித்திரத்தை உங்களின் ஞாபகார்த்தமாக அர்ப்பணம் செய்கிறோம்! அஹா, இரண்டாயிரம் தேச பக்தர்களின் இரத்தம்! அந்த உதிரப்பெருக்கிற்கே இச்சரித்திரம் அர்ப்பணம் செய்யப்படுகின்றது! வீர சிகாமணிகளே! பாரதத் தவப் புதல்வர்களான உங்களுடைய பெயர்களென்ன? தேசாவேசக் கனல் கனிந்து கொண்டிருந்த ஹிருதயம் படைத்த உங்களுக்கு அப்போரில் தலைமை வகித்த வீரகேசரி யார்? இதையெல்லாம் விவரித்துக் கூறும் அதிர்ஷ்டமும், பாக்கியமும், புண்ணியமும் எங்களுக்குக் கிடைக்க வில்லையே! மானிட வர்க்கத்தின் க்ஷேமத்திற்காக உயிரை அர்ப்பணம் செய்த உங்களுடைய பெயர்களைக் கூறும் பேறு எங்களுக்கு வாய்க்க வில்லையே! எனினும் உங்களுடைய ஞாபகார்த்தமாக இந்தச் சரித்திரத்தை அர்ப்பணம் செய்கிறோம். உங்களுக்கு வெற்றி கிடைக்கவில்லை. ஆயினுமென்ன? உங்களுடைய கீர்த்திக்கு எள்ளளவும் களங்கமேற்பட வில்லையல்லவா? இரண்டாயிரம் இரத்த ஊற்றுக்களில் ஸ்நானம் செய்ததன் மூலம், உங்களுடைய கீர்த்தியானது இன்னும் அதிக சோபையுடன் பிரகாசிக்கின்றது! நீங்கள் சிந்திய உதிரமானது அதற்கு முன் மாண்ட வீரர்களின் ஆத்மாவிற்குச் சாந்தியை யளிக்குமாக! எதிர்கால வீரர்களுக்கு இணையற்ற தேசாவேசத்தை உண்டு பண்ணுமாக!"

இத்தகைய வீராவேசச் சுதந்திர நூலை அருமையான முறையில் தமிழாக்கித் தந்தவர் 'ஜெயமணி' ஸா. சுப்பிரமணியம் அவர்களாவர்.

ஸ்ரீ ஸா. சுப்பிரமணியம் இருபது வருஷ காலமாகத் தமிழ்ப் பத்திரிகை உலகத்தில் தொண்டு புரிந்து கீர்த்தி பெற்றவர். சென்ற மகாயுத்தத்தின் போது அவர் மலாய் நாட்டில் வாழ்ந்து வந்தார். அச்சமயம் வாழ்க்கையில் மிக அருமையான சந்தர்ப்பம் அவருக்குக் கிடைத்தது.

நேதாஜீ சுபாஷ் சந்திரபோஸின் சுதந்திர இந்திய சர்க்காரின் கீழ் ஜெயமணி என்ற தேசீயப் பத்திரிகையை வெற்றிகரமாக நடத்திப் புகழ் பெற்றார். அப்போதுதான் இந்த 'எரிமலை' என்னும் நூலையும் தமிழ்ப் படுத்திப் பிரசுரித்தார்.

"மிகவும் அத்தியாவசியமான சமயத்தில் 'எரிமலை'யைப் பிரசுரித்ததின் மூலம் தாங்கள் இந்திய சுதந்திர இயக்கத்துக்குப் பேருதவி புரிந்திருக்கிறீர்கள்" என்று நேதாஜீ சுபாஷ் சந்திரபோஸினால் பாராட்டப்படும் பாக்கியத்தைப் பெற்றார். இத்தகைய சரித்திரப் பிரசித்தி யடைந்த புத்தகம் இப்போது முதன் முதலில் தமிழ் நாட்டில் வெளியாகி யிருக்கிறது. தமிழ்ப் புத்தக உலகத்தில் இந்த நூல் சரித்திரப் பிரசித்தி யடையும் என்பதில் சந்தேகமில்லை.



"உங்கள் சருமத்தை
லக்ஸ் டாய்லட் சோப்
குளுமையாகவும், அழகுடையதாகவும்
வைத்துக்கொள்ளுகிறது" என்று
சொல்லுகிறார்
ஹஸன்பானோ
LUX
TOILET SOAP
சினிமா நட்சத்திரங்கள் விரும்பும்
அழகையளிக்கும் சோப்!

ஓர் ஓடத்தில்

ஸி. ஆர். ராமஸ்வாமி


ராமஸ்வாமி ஐயங்கார் சங்கரகிரி ஸ்டேஷன் மாஸ்டர். அவருடைய வாழ்க்கையில் எத்தனையோ கஷ்டங்கள். அவருடைய மனைவி, கமலாவைப் பெற்ற பின் இறந்து விட்டாள். கமலாவும் கல்யாணமாய் ஐந்து வருஷத்தில் தன் கணவனை இழந்து இரண்டு ஆண் குழந்தைகளுடன் தகப்பனாரிடம் வந்து சேர்ந்தாள். இது போதாதென்று அவருடைய தைரியத்தைச் சோதிக்க, திடீரென்று இந்தத் திருட்டுப் பட்டம் வேறு?

விசுவநாதம் செட்டியார் கையில் ரசீதுடன் சரிகை பார்சலுக்காக வந்தார். ராமஸ்வாமி ஐயங்கார் பார்சல் முந்திய நாளே வந்து விட்டதை ஒத்துக் கொண்டார். விசுவநாதம் செட்டியார் பட்டு வேஷ்டி தரிசுகள் முதலாளி. ஸ்டேஷன் மாஸ்டருடன் அவர் பல வருஷங்கள் பழகியிருந்தார். ஐயங்காரிடம் செட்டியாருக்குத் தாக்ஷண்யம் உண்டு. இருந்தாலும் இரண்டாயிரம் ரூபாய் சரிகையை இழந்தால் எத்தனை நாள் சும்மா இருக்க முடியும்? பத்து நாளைக்குள் தேடித் தரவேண்டும். இல்லாவிட்டால் இரண்டாயிரம் ரூபாய் கடன் வாங்கியதாக ஒரு பத்திரம் எழுதி அதில் கையெழுத்துப் போடச் சொன்னார். ஐயங்கார் வேறு வழியில்லாமல் பத்திரத்தில் கையெழுத்துப் போட்டுக் கொடுத்து விட்டார்.

ராமஸ்வாமி ஐயங்கார் தீவிரமாய் யோசனை செய்தார். பார்சல் அறையின் சாவி தன்னிடம்தானிருந்தது. சில சமயங்களில் அது காணாமற் போவதுண்டு. திருட்டுப் போனதற்கு முந்திய வாரம் அது இரண்டு நாள் காணாமற் போய் அந்தச் சாவியின் ஜோடியிலிருந்து மற்றொன்றை எடுத்து உபயோகிக்க வேண்டியிருந்தது. வேலைக்காரன் கந்தன் அந்தக் காணாமற் போன சாவியை விறகு வைக்குமிடத்தில் கிடைத்ததாக அடுத்த நாள் எடுத்துத் தந்தான். ஆனால் திருட்டுப் போனது அதற்கு அடுத்த நாள் தான். ஏனென்றால் அன்று பார்சல் அறையில் தனக்கு எதிராகவே பார்சலை வைத்து விட்டுக் கந்தன் சாவியைத் தன்னிடம் தந்தது அவருக்கு நன்றாய் ஞாபகமிருந்தது.

ஒரு வாரமாயிற்று. விசுவநாதம் செட்டியார் மறுபடியும் அவரிடம் வந்து, "பம்பாயிலிருந்து எனக்கு ஒரு சரிகை பார்சல் வரும். இந்தத் தடவையும் அதை இழந்து விடாதீர்கள்; வந்தவுடன் எனக்குச் சொல்லியனுப்புங்கள்" என்று சொல்லி விட்டுப் போனார்.

ராமஸ்வாமி ஐயங்கார் கந்தனை இரவு ஸ்டேஷனிலேயே படுக்கச் சொல்லி விட்டுத் தன் ஜாகைக்குச் சென்றார். ஸ்டேஷன் மாஸ்டர் வீடு ஸ்டேஷனுக்கு நூறு கஜ தூரத்தில்தானிருந்தது. அவருக்குத் தூக்கம் சரியாக வரவில்லை. ஏதோ கனவு கண்டு நடுநிசியில் விழித்துக் கொண்டார். உடனே கையில் துப்பாக்கியை எடுத்துக் கொண்டு ஸ்டேஷனுக்குச் சென்றார். பார்சல் ஆபீஸ் கதவைத் திறக்கப் போனார். சாவி பூட்டைத் திறக்க மறுத்தது. லாந்தர் வெளிச்சத்தால் பூட்டு ஏற்கெனவே திறந்திருப்பதைக் கண்டார். கதவைத் தள்ளினார். அவர் கதவைத் திறக்க முயலுகையில், யாரோ ஒருவன் உள்ளிருந்து அதைத் திறந்து கொண்டு வெளியே ஓடப் பார்த்தான். ஐயங்கார் அவனைப் பிடித்துக் கொண்டார். லாந்தரைத் தூக்கி அவனை உற்றுப் பார்த்ததில், அவன் கந்தன் என்பதைக் கண்டார். துப்பாக்கியைக் காட்டி, கந்தனை மறுபடியும் அறைக்குள் போகச் சொல்லிக் கதவைத் தாளிட்டு, "கந்தா, உனக்கு இந்த புத்தி எப்பொழுது ஏற்பட்டது? உன்னால் எனக்கு வேலையும் போய், ஏழு வருஷம் ஜெயிலிலும் இருக்க வேண்டி வருமென்பது உனக்குப் புரியவில்லையா? உன் தகப்பனுக்கு நான் நிலத்தை விற்று அவன் இறக்கும் பொழுது உன்னைக் காப்பாற்றுவதாக வாக்களித்து, இங்கே உன்னை வேலைக்கு வைத்துக் கொண்டதற்கு இதுதானா நீ செய்யும் பிரதியுபகாரம்?" என்று வருத்தத்துடன் கேட்டார்.



கந்தன் தலை குனிந்தபடி சிறிது நேரம் பேசாமலிருந்தான். சிறு வயதில் காட்டில் ஐயங்காருடன் மரம் ஏறி மாங்காயும் இளநீரும் அறுத்ததும், கிணற்றில் நீந்தி விளையாடியதும் அந்தச் சமயம் சேர்ந்தாற்போல் அவனுடைய நினைவிற்கு வந்தது. தான் வேலனுக்குக் கொடுக்க வேண்டிய கடன், அவன் செய்த துர்ப்போதனை, அவன் தங்கை பாவாயியை மணம் செய்து கொள்வதாகத் தான் செய்த தீர்மானம் எல்லாவற்றையும் மறந்து விட்டான். ஐயங்கார் காலடியில் வீழ்ந்து மன்னிப்புக் கேட்டான். "பார்சலைத் தந்து விடுகிறேன்" என்றான். அதற்குள் வெளியில் ப்ளாட்பாரத்தில் யாரோ பேசிக்கொண்டு நடந்து வரும் சந்தடி கேட்டது. ஐயங்கார் சட்டென்று எழுந்து பின் கதவைத் திறந்து விட்டு, "ஓடிப் போ!" என்றார். கந்தன் தயங்கினான். ஐயங்கார் அவனை மெதுவாய் வெளியே தள்ளி விட்டு கதவைச் சாத்தி விட்டார்.

ஒரு வாரம் கழிந்தது. விசுவநாதம் செட்டியார் போலீசிற்கு ரிபோர்ட் செய்து விட்டார். போலீசார் ராமஸ்வாமி ஐயங்காரின் நடவடிக்கையைப் பற்றிச் சந்தேகித்து அவரைக் கைது செய்தார்கள். அவர், திருட்டுப் போன விதம் தனக்குத் தெரியாது என்றார். "யார் பேரிலாவது சந்தேகம் உண்டா?" என்று இன்ஸ்பெக்டர் கேட்டதற்கு, "இல்லை; சாவி என்னிடத்தில்தானே எப்பொழுதும் இருக்கிறது!" என்றார் ஐயங்கார். சப் இன்ஸ்பெக்டர் "நீர்தான் திருடர்!" என்றார். ஐயங்கார் "எல்லாம் விதிப்படி நடக்கும்" என்றார்.

இரவு இரண்டு மணிக்குப் போலீஸ் கான்ஸ்டேபில் ஏதோ 'படார்' என்று சத்தம் கேட்டு எழுந்திருந்தான். மேஜையின் மேல் ஒரு காகிதம் சுற்றின கல் வந்து விழுந்திருந்தது. அந்தக் காகிதத்தை எடுத்துப் பிரித்துப் படித்தான்:

'ஸ்டேஷனுக்குப் பின்புறம் பெரிய புளிய மரத்தின் கிளையில் நான் திருடின சரிகைப் பார்சலைக் கட்டி வைத்திருக்கிறேன். ராமஸ்வாமி ஐயங்கார் திருடவில்லை' என்று எழுதி யிருந்தது.



காலையில் இன்ஸ்பெக்டருக்கு அந்தக் கடிதம் காட்டப்பட்டது. இன்ஸ்பெக்டர் விசுவநாதம் செட்டியாரைக் கூப்பிட்டுப் பார்சலைக் காண்பித்தார். விசுவநாதம் செட்டியார் அது தனக்கு வர வேண்டிய பார்சல்தான் என்று சொன்னார். கையெழுத்தும் கந்தன் கையெழுத்துதானென்று விண்ணப்பங்களிலிருந்து ருசுவாயிற்று. ராமஸ்வாமி ஐயங்கார் விடுதலை செய்யப்பட்டார்.

கந்தன் மறைந்து போனான். அவன் பட்டாளத்தில் சேர்ந்து விட்டதாக வதந்தி மட்டும் பரவ ஆரம்பித்தது. ஒரு வருஷம் சென்றது. அவனைப் பற்றி யாருக்கும் ஒரு தகவலும் கிடைக்கவில்லை. அப்படியே மூன்று ஆண்டுகள் கழிந்து விட்டன.

* * *

பாவாயி மட்டும் கந்தனை மறக்கவில்லை. இரவில் யாருக்கும் தெரியாமல் ஊரை விட்டுப் போகு முன் கந்தன் குடிசைச் சாளரத்தின் வழியாக எறிந்து விட்டுச் சென்ற கடிதத்தை எடுத்துப் படித்தாள். கந்தனைப் பற்றி அண்டை அயலில் இருந்தவர்கள் நினைத்தமாதிரி அவன் இறந்து விட்டதாக அவளுக்குத் தோன்றவில்லை.

ஒரு நாள் இரவு குடிசைக்குப் பின்னால் "பாவாயி!" என்று தெரிந்த குரலில் யாரோ கூப்பிடுவது கேட்டுப் பயமும் ஆவலும் கலந்த படபடப்புடன் பின்னால் சென்று பார்த்தாள். "பாவாயி, உன்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளத்தான் வந்திருக்கிறேன். உனக்குக் கல்யாணம் ஆகவில்லையே?" என்று கேட்டான் கந்தன். பாவாயி, "ஆமாம், இங்கே யார் திருடனுக்கு வாழ்க்கைப்படக் காத்திருக்காங்க?" என்று சொல்லி மேலே பேசாமல் மறுபடியும் குடிசைக்குள் நுழைந்து விட்டாள்.

அடுத்த நாள் காலை யாரோ ஒருவன் ராணுவ உடையில் வந்து "வேலன் இருக்கிறானா?" என்று அவனைக் கேட்டுக் கொண்டே, பதிலைக்கூட எதிர்பாராமல் குடிசைக்குள் நுழைந்தான். வேலனுக்கு முதலில் அடையாளம் தெரியவில்லை. பிறகு, கந்தன் என்று கண்டு

கொண்டான். "எனக்கு இங்கே ஒரு நல்ல பெண்ணைப் பார்த்துப் பிடித்துக் கொடு!" என்றான் கந்தன்.

வேலன், "ஏன், என் தங்கையை உனக்குப் பிடித்திருக்கு மென்றல்லவா நினைத்தேன்!" என்றான்.

அதற்குக் கந்தன், "உன் தங்கையா? அவள் என்னைத் திருடன் என்று நிந்திக்கிறாள். நீ உன் திருட்டு சகவாசத்தை விட்டுவிடு. நான் இருநூறு ரூபாய் கடன் தருகிறேன். ஓட்டல் வைத்துப் பிழைத்துக் கொள். உன் தங்கையைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளத்தான் நான் லீவ் வாங்கிக் கொண்டு வந்தேன். நான் ஐயரைப் பார்த்து விட்டு வருகிறேன்" என்று விடை பெற்றுக் கொண்டு சென்றான். போகையில், பாவாயியைப் பார்த்துச் சிரித்து விட்டுப் பட்டாளத்து நடையில் வெளியே சென்றான்.

மத்தியானம் சாப்பிட்டு விட்டு இளைப்பாறிக் கொண்டிருந்த ஐயங்கார், வாசலில் "ஐயா!" என்ற சத்தம் கேட்டு எழுந்திருந்து கதவைத் திறந்தார். வாசலில் புன்முறுவலுடன் 'ஸெல்யூட்' செய்தவண்ணம் நின்று கொண்டிருந்த சிப்பாயைப் பார்த்ததும், "கந்தனா?" என்று கேட்டார். "நான் இரண்டு வாரம் லீவ் எடுத்துக் கொண்டு வந்திருக்கிறேன். கல்யாணம் செய்து கொள்ளப் போகிறேன். உங்கள் ஆசிர்வாதம் பெற்றுக்கொள்ள வந்தேன்" என்று சொன்னான்.

ஐயங்கார், "பெண் யார்?" என்று விசாரித்தார்.

கந்தன், "வேலனின் தங்கை" என்றான்.

ஐயங்கார், "மறுபடியும் அவனுடைய சகவாசமா?" என்று கேட்டார்.

கந்தன் "கெட்டவர்கள் திருந்த மாட்டார்களா? அவன் ஹோட்டல் வைக்கப் போகிறான்" என்று சொல்லிக் கைகூப்பி விடை பெற்றுக் கொண்டான்.

சண்டை நின்று விட்டது. கந்தன் திரும்பி வந்தான். ராமஸ்வாமி ஐயங்கார் வேலையிலிருந்து ரிடையர் ஆகி விவசாய ஜீவனம் நடத்தி வந்தார். அதில் கந்தன் மேஸ்திரி வேலை பார்த்து வந்தான். பாவாயி தன் புருஷன் 'சிப்பாய்' என்று கர்வமுடன் சொல்லிக்கொள்ள முடியாததைப் பற்றி முதலில் சிறிது வருத்தமுற்றாள். அவள் புருஷன் கந்தன், "ராணுவக் காக்கியை விட இந்தக் கதர் காக்கி அழகாயிருக்கிறது. சண்டையில் சாவதைவிட கண்ணியமாய் வாழ்வதில் அதிக தைரியமும் கௌரவமும் இருக்கிறது" என்று சொல்லி அவளை உற்சாகப் படுத்தினான்.

கள்ளுக் கடை வைத்துப் பணம் சம்பாதிக்க நினைத்த வேலனைக் கண்டித்து, "ஏழைகள் பொருளைத் திருட நினைப்பது இனி நடக்காது. காங்கிரஸ் மறுபடியும் அரசாட்சியை ஏற்றுக் கொள்ளும். கள்ளுக் கடைகள் மூடப்படும். தேங்காய் நாரிலிருந்து கயிறு செய்; தேங்காயிலிருந்து எண்ணெய் எடு; சோப்பு செய்; தேங்காய்ச் சக்கையிலிருந்து பிஸ்கோத்தும் மிட்டாயும் செய்து பக்ஷணக் கடையில் விற்கச் செய்" என்று சொன்னான்.

வேலன், "அதெல்லாம் யாருக்குத் தெரியும்?" என்றான்.

கந்தன், "காங்கிரஸ் வாத்தியார்களை அனுப்பும்" என்றான்.

ஐயங்காரும், கந்தனும் வாழ்க்கை நதியில் ஒரே ஓடத்தில் சென்றார்கள்.

கல்கி சிறுகதைப் போட்டி

●

1946-ம் வருஷத்துக் கல்கி சிறுகதைப் போட்டியின் விதிகள் ஏற்கெனவே பிரசுரமாகி யிருக்கின்றன. அதற்காக நியமிக்கப்பட்டிருக்கும் பஞ்சாயத்தாரின் பெயர்கள் பின்வருமாறு:—

★

★ ★

(1) ஸ்ரீ பெ. திருகூட சுந்தரம் பிள்ளை; (2) ஸ்ரீ தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான்; (3) ஸ்ரீ என். ராமஸ்வாமி, (அமிலன்); (4) ரஸிகமணி டி. கே. சிதம்பரநாத முதலியார்; (5) ஆசிரியர், "கல்கி."

எழுத்தாள நண்பர்கள் போட்டி முடிவு தேதியான 30-9-46க்குள் தங்கள் சிறுகதைகளை அனுப்பி வைத்து விடுமாறு கோருகிறோம்.


●

மானேஜர், "கல்கி", கீழ்ப்பாக்கம், சென்னை

பழைய காருக்கும்

புதிய காருக்கும்

சிறந்த டயர்



டன்லப்

DH 276 TB



-ராகவன்-

பொல்லாத மன்னி

ஜயலக்ஷ்மி ஸ்ரீனிவாசன்

"வனஜாவுக்கு உடம்பே நன்றாயில்லையாம். அம்மா பிரசவத்திற்கு வருவது சந்தேகம் என்று எழுதியிருக்கிறான்!" என்று வேணு, கடிதத்தைச் சாந்தாவிடம் கொடுத்தான்.

"அட ராமா! பின் என் அம்மாவுக்கும் வரச் சொல்லி எழுதவில்லையே?...... ஊம்......அவள் வந்துதான் என்ன சாதிக்கப் போகிறாள், இந்தக் குளிரில்? அவளே ஆஸ்த்துமாக்காரி!" என்றாள் சாந்தா.

"என்ன செய்வது, இருந்தாலும் பெரியவாள் துணை வேண்டாமா? நான் எதற்கும் விஷயத்தை விவரமாய் எழுதிப் போட்டு விடுகிறேன். அப்புறம் அவர்கள் பாடு!"

"சரி, எப்படியோ சுவாமி விட்ட வழி ஆகிறது!" என்றாள் சாந்தா.

என்னதான் பணம் இருக்கட்டும், அந்தஸ்து இருக்கட்டும், ஆட்கள் இருக்கட்டும், ஒரு சமயம் சந்தர்ப்பம் என்றால் ஒத்தாசைக்கு நெருங்கிய உறவினர் யாராவது இருக்கத்தான் வேண்டியிருக்கிறது. ஆகவே, "பிரசவத்திற்குப் பிறந்தகம் போவதுதான் நல்லது" என்று வேணு, சாந்தாவிற்கு எவ்வளவோ சொல்லிப் பார்த்தான். அவள் இணங்கவில்லை. "நம்மாத்தில் ஒத்தாசைக்கு ஆட்கள் இல்லையா? அப்போதைக்கு வேண்டுமானால் 'ஸ்பெஷல் நர்ஸ்' ஒருத்தியையும் ஏற்பாடு செய்து கொண்டால் போகிறது! உங்கள் அம்மாவும் அந்தச் சமயத்திற்கு வந்து விடுவார். பட்டணத்திற்கு நான் போனால்தான் என்ன, அம்மாவுக்கோ உடம்பே நன்றாயில்லை. மன்னி என்ன செய்து கிழித்துவிடப் போகிறாள்! என்னமோ, எனக்கு அங்கே போகக் கொஞ்சம்கூடப் பிடிக்கவில்லை!" என்று சொல்லி விட்டாள் சாந்தா.

அவ்வளவு தூரம் அவள் தன் பிறந்தகத்திற்குப் போக மறுப்பதற்கு உண்மையான காரணம் என்னவென்பதை வேணு அறியான்.

* * *

சாந்தாவின் கணவன் மைசூரில் பெரிய உத்தியோகத்தில் இருந்தான். அவன் தன் மனைவியின்மீது வைத்துக் கொண்டிருந்த ஆசையும் அன்பும் இவ்வளவு அவ்வளவு அல்ல. சாந்தாவுக்கு இதுதான் தலைச்சன். அவள் பெற்றுப் பிழைக்க வேண்டுமே என்ற கவலை அவனைப் பிடுங்கித் தின்று கொண்டிருந்தது. சாந்தாவின் தமையன் என்னவோ ஐந்தாம் மாதமே பருப்புத் தேங்காய், பக்ஷண வகைகள் எல்லாவற்றுடனும் வந்து, தங்கையை அழைத்தான். ஆனால் சாந்தா, தன் கணவனை விட்டுப் பிரிய இசையவில்லை. அதற்கேற்றாற் போல் அவனும், "இங்கே சௌகரியத்துக்குக் குறைவு என்ன? வீணாய் அவளை ரயிலில் பிரயாணம் செய்துவைத்து அலைக்கழிப்பானேன்?" என்றான்.

"வளை-காப்பு செய்ய வேண்டாமா, பக்ஷணம் செய்து கொடுக்க வேண்டாமா? என்னவோ அப்பா! இங்கே இருக்கும் சௌகரியம் அங்கே இல்லாவிட்டாலும் எனக்குக் கொள்ளை ஆசை இருக்கு; இருப்பது ஒரே தங்கைதானே? அம்மாவுக்கும் ஆசை இருக்காதா?" என்றான் ராஜு.

"இதெல்லாம் என்ன ஆசை, அண்ணா! நான் சௌக்கியமாகவும் சந்தோஷமாகவும் இருக்கிறேன் என்று அம்மாவிடம் சொல்லிவிடேன்!" என்றாள் சாந்தா.

இவ்வளவிற்கும் சாந்தாவுக்கு அவள் மன்னிமீது ஏற்பட்டிருந்த அருவைதான் காரணம். தன்னிடம் எவ்வளவோ

அருமையாக அன்பு பாராட்டி வந்த அண்ணா, மன்னி வந்த பிறகு தன்னைப் பொருட்படுத்துவதில்லை என்ற குருட்டு நம்பிக்கை அவளுக்கு. மன்னி அவனிடம் எவ்வளவோ ஆசையாகத்தான் இருந்தாள். அதெல்லாம் அவளுக்குத் தோன்றுவதில்லை. அன்று மன்னிக்குப் பூச்சூட்டும்போது, புடவைக்குப் போட்டி போட்டவளல்லவா, சாந்தா?

மறுநாள் மன்னிக்குப் பூச்சூட்டல். பருப்பு இல்லாமலா கலியாணம்? அது போல் நாத்தனார் இல்லாமலா பூச்சூட்டல்? முதல் நாள் காலை மைசூரிலிருந்து வந்து இறங்கினாள் சாந்தா. பகல் போஜனம் ஆனபிறகு எல்லோரும் கூடத்தில் உட்கார்ந்து கொண்டு பேசிக் கொண்டிருந்தனர்.

"ஏனம்மா, சொர்ணம்! உனக்கு வாங்கி வைத்திருக்கிற புடவையைக் கொண்டுவந்து காண்பியேன், சாந்தாவுக்கு!" என்றாள் சாந்தாவின் தாயார்.

"அத்துடன் நாத்தனாருக்காக வாங்கி வைத்திருக்கும் சம்பாவனைப் புடவையையும் கொண்டு வா, சொர்ணம்!" என்றான் ராஜு புன்முறுவலுடன்.

சொர்ணம் புடவைகள் இரண்டையும் பீரோவிலிருந்து எடுத்துவந்து நாத்தனாரிடம் கொடுத்தாள்.

ஒன்று பச்சை வர்ணம், இன்னொன்று ஊதா வர்ணம். "இந்தப் பச்சை வர்ணப் புடவை ரொம்ப நன்றாயிருக்கிறதே. இது யாருக்கு?" என்றாள் சாந்தா.

"அதைத்தான் உன் மன்னி பொறுக்கி எடுத்துக் கொண்டிருக்கிறாள். மற்றொன்று உனக்கு!" என்றான் ராஜு.

"தூ! இது நன்றாயில்லை!" என்று சிணுங்கினாள் சாந்தா.

"அதற்கென்ன, நீயே பச்சைப் புடவையை வைத்துக் கொள்; எனக்கு ஊதாவே இருக்கட்டும்" என்றாள் மன்னி.

அதற்குள் சொர்ணத்தின் மாமியார் குறுக்கிட்டு, "அவள் கர்ப்பிணி; ஆசைப்பட்டு எடுத்துக் கொண்டது! அவளே அதை எடுத்துக் கொள்ளட்டும். பிழைத்துக் கிடந்தால் உன்னுடைய பூச்சூட்டலுக்கு இதுபோலவே ஒரு புடவை எடுத்து விடலாம்" என்று பெண்ணிற்குப் பரிகாரமாகச் சமாதானம் சொன்னாள்.

"ஊதாவுக்கு என்ன வந்தது, சாந்தா? பார்க்கப் போனால் பச்சையை விடப் பத்து ரூபாய் அதிகமான்னா கொடுத்திருக்கிறேன், அதற்கு!" என்றான் ராஜு.

எல்லோரும் வேண்டுமென்றே மன்னிக்குப் பரிந்து பேசுகிறார்கள் என்று சாந்தா எண்ணினாள். ஆகவே அவள், "எனக்குத் தெரியுமே, அண்ணா! இனி உனக்கு என்னைப் பற்றி என்ன கவலை? அதைப் பறிக்கத்தான் மன்னி வந்து விட்டாளே! இப்பொழுது இன்னொன்று வரப்போகிறது. சொந்தம் கொண்டாட!" என்றாள் எரிச்சலுடன்.

இந்தச் சமயத்தில் அவள் தாயாரும், மன்னியும் ஏதோ காரியமாக உள்ளே போனார்கள். ராஜுவுக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்து விட்டது. "சும்மா தத்துப் பித்து என்று



தர்ம சங்கடம்!

— [illegible] —



"இந்தப் பாட புத்தக ஆசிரியர் ஒரு இடத்தில் 'சுரித்தல்' என்று எழுதி இருக்கிறார்; இன்னொரு இடத்தில் 'சுரிந்தல்' என்று எழுதி இருக்கிறார்! பார்த்துத் திருத்திச் சரியாய் எழுதிக்கொண்டு வா!"

"எதைத் திருத்துவது, ஸார்!...உம்...ம்......ம்..."

"இரண்டில் எது தப்போ, அதைத் திருத்திக் கொண்டு வா!"

உணருதே! அவன் வந்து விட்டான் என்று உன்னிடம் நான் ஒன்றும் வித்தியாசமாக நடந்து கொள்ளவில்லை. ஏன் கம்மா அவளை இப்படிக் கரித்துக் கொட்டுகிறாய், நல்ல நாளும் கிழமையுமாய்!" என்றான்.

இப்படியே சாந்தா பிறந்தகம் வரும் பொழுதெல்லாம் தமையன்மீது ஏதாவது ஒரு குற்றச் சாட்டுச் சாற்றாமல் போகமாட்டாள். மன்னி சொர்ணம், சாந்தாவின் கருத்தறிந்து அவள் மனம் கோணாமல் எவ்வளவோ சௌஜன்யமாக நடந்து கொண்டாலும் அவளுக்கு ஏனோ பிடிப்பதில்லை.

அண்ணாவின் உள்ளத்தில் தன் மனைவிக்கென்று ஒரு தனி இடம் உண்டு என்றாலும், அருமைத் தங்கைக்கும் பிரத்தியேகமானதொரு இடம் உண்டு என்பதைப் பேதை சாந்தா அப்போது உணரவில்லை.

* * *

சொர்ணம் புக்ககம் சென்று வந்ததிலிருந்தே சாந்தாவின் அசூயை உச்ச நிலையை அடைந்துவிட்டது. நல்லவேளையாக அதற்குள் சாந்தாவின் கணவனான வேணு, மைசூர் சிவில் சர்வீஸ் பரீக்ஷையில் முதன்மையாகத் தேறினான். மைசூரிலேயே அவனுக்கு உயர்ந்த உத்தியோகமும் ஆயிற்று. ராஜு, சாந்தாவைத் தகுந்த சீர் வரிசையுடன் புக்ககத்தில் கொண்டுபோய் விட்டுவிட்டு வந்தான். இனிமேல் அண்ணா - மன்னியின் தயவு தனக்குத் தேவையில்லை என்று அவள் மனம் பூரித்தாள். அதன் பிறகு தான் மன்னியின் பூச்சூட்டலுக்குப் பிறந்தகம் போய் வந்தாள் சாந்தா. அப்புறம் அவள் கருத் தரித்திருப்பதைக் கேட்டு, அழைத்துச் செல்ல வந்த தமையனைத் திருப்பி அனுப்பிவிட்டாள்!

ஆனால் இன்றோ? புக்ககத்தினரை நம்பின பயன்! மாமியார் தன்னுடைய பெண் வீட்டில் போய் விசாரமற்று உட்கார்ந்துவிட்டாள். இப்பொழுது தன் உடல் நலனைக் கவனித்து, வாய்க்குப் பிடித்தமான பக்ஷணம் பணியாரங்கள் செய்து அன்புடன் பரிமாறி, முறை ஜலம் விட்டு பக்ஷமாகக் கவனித்துக் கொள்ள நெருங்கின உறவினர் யாரும் அருகில் இல்லையே என்ற ஏக்கம் சாந்தாவைப் பிடித்தது. தனக்கு ஒரு சகோதரி இருந்திருந்தால் இந்தச் சமயத்தில் தன்னை இப்படித் தன்னந் தனியாக விட்டிருப்பாளா என்று தோன்றிற்று அவளுக்கு.

"மன்னியாவது ஒத்தாசைக்கு வந்தால் நல்லதுதான்! ஆனால், அவள் வருவாளா? நான் அவளை ஆட்டிவைத்த ஆட்டமெல்லாம் லேசில் மறக்கக் கூடியவையா?" — இப்படியெல்லாம் சாந்தா தன் அறியாமையை உணர்ந்து மனம்

வெதும்பினாள். மன்னியை வரச்சொல்லி உடனே ஒரு தந்தியாவது அடித்து விடலாமா என்று சில சமயம் அவளுக்குத் தோன்றும். ஆனால் தன்மதிப்பு என்று ஒன்று உண்டே, அது வந்து குறுக்கிடும்.

என்ன இருந்தாலும் மன்னி நல்லவள், பொறுமைசாலி! தன்னைக் கட்டாயம் மன்னித்து விடுவாள்; தன் தங்கையாக ஏற்றுக் கொள்வாள்—ஏன், இப்பொழுது மாத்திரம் என்ன, என் மேல் அவளுக்கு அன்பு இல்லையா? "சாந்தா, உனக்குப் பாதாம் ஹல்வாவும், குஞ்சாலாடும் ரொம்பப் பிடிக்குமே என்று செய்து பார்சலில் அனுப்பியிருக்கிறேன்" என்றும், "அம்மா தஞ்சாவூரிலிருந்து அரிசி அப்பளமும், பொருவிளங்காய் உருண்டையும், வெல்லச் சீடையும் எங்கள் அண்ணாவிடம் கொடுத்து அனுப்பினாள். கர்ப்பிணியான உன்னை விட்டுவிட்டுச் சாப்பிட எனக்கு மனம் வரவில்லை; உனக்கும் கொஞ்சம் பார்சலில் அனுப்பியிருக்கிறேன்" என்றும் மாதா மாதம் பார்சல் அனுப்பிக் கொண்டே இருக்கிறாளே!—இப்படியெல்லாம் இருக்கும்போது, நாம் தந்தி அடித்தால் அவள் கட்டாயம் வந்து விடுவாள். குழந்தை முரளியையும் பார்த்தமாதிரியிருக்கும்—என்றெல்லாம் யோசித்து யோசித்துக் கடைசியில் ஒரு நாள் பகல் போஜனமானதும், கணவனிடம் மெதுவாக இந்த விஷயத்தைச் சொன்னாள் சாந்தா. வேணுவும் உடனே தந்தித் தாள் ஒன்றை எடுத்து எழுதத் தொடங்கினான்.

அதே சமயம் வீதியில் வண்டி வந்து நின்ற சத்தம் கேட்டது. இருவரும் எழுந்து வாசலுக்கு ஓடி வந்தனர். சாக்ஷாத் சாந்தாவின் அண்ணாவும், மன்னியும் தங்கள் குழந்தை முரளியுடன் காட்சியளித்தனர்!

சாந்தாவும், அவள் கணவனும் தங்கள் கண்களையே நம்பவில்லை. ஒரு கணம் மெய்மறந்து நின்ற பிறகு, "மன்னீ!" என்று சொர்ணத்தின் கையை அன்புடன் பற்றினாள் சாந்தா.

"என்ன, ஸார்! ஒரு தந்தி கொடுத்திருந்தால் ரயிலுக்குக் காருடன் வந்திருப்பேனே!" என்றான் வேணு.

"அடித்தேனே, இன்னும் கிடைக்கவில்லையா?—'சாந்தா தான் நம்மாத்துக்கு வரவில்லை; இந்தச் சமயத்தில் நாமாவது அங்கே போய் அவளுக்கு ஒத்தாசை செய்யவேண்டும்' என்று இவள் துடியாய்த் துடித்தாள். அம்மாவும், அவளைச் சீக்கிரம் அழைத்துக் கொண்டுபோய் விட்டுவிட்டு வரும்படி எச்சரித்தாள். ஆபீஸில் ஒரு நாள் லீவுதான் கிடைத்தது; அழைத்துக் கொண்டு வந்தேன். இன்றிரவே நான் பட்டணத்துக்குக் கிளம்ப வேண்டும்" என்றான் ராஜு.

அருமை ஒழிந்த சாந்தா, தன் நன்றியறிதலையும் சந்தோஷத்தையும் அண்ணாவுக்கும் மன்னிக்கும் தெரிவிக்கும் வகை அறியாமல் திணறினாள்.

காலக்ஷேபம்

பைத்தியக்கார ஆஸ்பத்திரியைப் பார்வையிட வந்த பெரிய மனிதரை, ஆஸ்பத்திரி டாக்டர் அழைத்துக் கொண்டு ஒவ்வோர் இடமாகக் காண்பித்துக் கொண்டு வரும்போது ஓரிடத்துக்கு வந்ததும், "இந்த இடத்தில்தான் பைத்தியம் பிடித்த மோட்டார் ஓட்டிகளை வைத்திருக்கிறோம்" என்று தெரிவித்தார்.

பெரிய மனிதர்:—அப்படியா? இவ்விடத்தில் அந்தமாதிரி பைத்தியக்காரே இல்லை போலிருக்கிறதே!

டாக்டர்:—வேண்டிய பேர்கள் இருக்கிறார்கள்.

பெரிய மனிதர்:—இந்த அறையில் ஒருவரையும் காணோமே!

டாக்டர்:—நன்றாய்ப் பாருங்கள்! எல்லோரும் படுக்கைகளுக்கடியில் படுத்துக் கொண்டு மோட்டார்ரிப்பேர் செய்கிறார்கள்!

வக்கீல்:—நீர் உண்மையிலேயே குற்றம் செய்யவில்லையே?

கட்சிக்காரன்:—சத்தியமாக இல்லை.


வக்கீல்:—குற்றம் நடந்த சமயத்தில் உம்மை யாராவது பார்த்தார்களா?

கட்சிக்காரன்:—நல்லவேளையாக என்னை ஒருவரும் பார்க்கவில்லை!

***

"பிரஹலாதன் சரித்திரத்தில் இரணியன் வேஷம் போட்டுக் கொண்டு நடித்த பிறகு நீ கடைப்பக்கே இல்லையாமே?"

"ஆமாம்; அந்த நாடகத்தில் ஜனங்களெல்லாம் ஏகோபித்து, 'இரணியனை நரசிம்ம பகவானிடம் கொடுக்க வேண்டாம். இங்கே போடுங்கள்; நாங்கள் பார்த்துக் கொள்ளுகிறோம்!' என்று கத்தினார்கள்!"



தற்கால கட்டிட நிர்மாணம்

குடியிருப்பு வசதி

உணவுக்கும் உடைக்கும் அடுத்த படியாக மனிதனுக்கு அவசியமானது குடியிருப்பு வசதி. தற்சமயம் வீடுகளுக்கு மிகுந்த அவசியம் ஏற்பட்டிருப்பது யாவருக்கும் தெரியும். இந் நெருக்கடியை சீக்கிரத்தில் ஓரளவுக்காவது தீர்த்து வைக்க வேண்டியது அவசியம்.

கான்கிரீட்—நாள்பட உழைக்கும் தன்மை, சிக்கனம், சுத்தம், தீ விபத்துக்குள்ளாகாமை முதலிய குணங்க ளுடையதால்—பணக்காரர்களுக்கு மட்டு மல்லாமல் எல்லோருக்கும் ஏற்ற கட்டிட சாதனமாகிறது.

கான்கிரீட்டை நன்கு பயன் படுத்திக் கொள்ள கான்கிரீட் அஸோஸியேஷன் ஆப் இந்தியாவின் (199, மவுண்ட் ரோடு, மதராஸ்) உதவி எப்பொழுதும் கிடைக்கும்.

தி ஸிமெண்ட் மார்கெட்டிங் கம்பெனி ஆப் இந்தியா லிமிடெட்.

CM. 103 C—Tamil

அரிசியின் ஆனந்தம்

விதூஷகன்

ஒரு காலத்தில் தன்னை மிகவும் அலட்சியமாக மதித்து வந்த மனித வர்க்கம் இன்று தன்னை எவ்வாறு மதிப்பிடுகிறது என்பதை அறிந்து வருவதற்காக, ஸ்ரீமான் அரிசி ஒரு நாள் தன் உமிச் சட்டையை எடுத்துப் போட்டுக் கொண்டு சுற்றுப் பிரயாணம் கிளம்புகிறார்.

முதல் முதலாக அவர் ஒரு சிறு கூட்டத்தில் முண்டியடித்துக் கொண்டு நுழைகிறார். கும்பலில் உள்ள ஒவ்வொருவர் கையிலும் ஒரு சிறு பையோ, அல்லது பாத்திரமோ இருக்கிறது. அவர்கள் 'ரேஷன்' அரிசி வாங்க வந்தவர்கள். ஒவ்வொருவராகச் சென்று வரிசையாக அரிசி வாங்கும் அழகையும், கடைக்காரர் வரிசைக் கிரமமான பல சொப்புகளால் அரிசியை அளந்து போடும் விதரணையையும், ஜனங்கள் பகவானுடைய வரப்பிரஸாதத்தைப் பெறுவது போல் பயபக்தியுடன் அதை வாங்கிக் கொண்டு திரும்பும் காட்சியையும் கண்டு அவர் மனம் பூரித்துப் போகிறது!

வழியில் கல்யாணப் பத்திரிகை ஒன்றைக் கண்டெடுக்கிறார் ஸ்ரீமான் அரிசி. "முகூர்த்தம் ஒரே நாள்" என்ற எச்சரிக்கையின் கீழ், "சாப்பாடு ஒரே வேளை!" என்றும், "ரேஷனை முன்னாடி அனுப்பி வையுங்கள்" என்றும் அச்சடித்திருப்பதைக் கண்டு அகமகிழ்ந்து போகிறார்!

அடுத்தபடியாக ஸ்ரீமான் அரிசி நுழைந்த இடம் ஒரு ஹோட்டல். "அரிசியினாலோ, அரிசி மாவினாலோ தயார் செய்யப்படும் எந்தவிதமான பக்ஷணங்களும் இங்கே கிடையாது" என்ற குறிப்புடன் வாசலில் தொங்கும் விளம்பரப் பலகை அவரைக் குலுங்கக் குலுங்கச் சிரிக்கச் செய்கிறது.

உள்ளே நுழைந்த ஸ்ரீமான் அரிசியின் திருஷ்டி அங்கே சாப்பிட்டுக் கொண்டிருக்கும் ஒரு மனிதரின் இலையில் விழுகிறது. என்ன ஆச்சரியம்! இலையில் சாதம் வைக்கப்பட வேண்டிய இடத்தில் சப்பாத்தி வைக்கப்பட்டிருக்கிறது. ஸ்ரீமான் அரிசி கண்ணைக் கசக்கிக் கொண்டு இலை முழுவதும் தேடுகிறார்! ஏதோ ஒரு கறிக்கு அடுத்தாற்போல் 'அரிசிக் கறி'யும் வைக்கப்பட்டிருப்பதைக் கண்டு அவருக்குத் தூக்கி வாரிப் போடுகிறது. சாப்பிடுபவரைப் பரிதாபமாகப் பார்த்து விட்டு வெளியே வருகிறார்.



காலேக்ஷு பேர்வழிகள் ஒரு பத்திரிகையின்மேல் கவிழ்ந்துகொண்டு எதையோ வெகு சுவாரஸ்யமாகப் படித்துக்கொண்டிருக்கிறார்கள். சிரமப்பட்டு ஸ்ரீமான் அரிசி தலையை நுழைத்துப் பார்க்கிறார்.

"சப்பாத்திக் கஞ்சியில் ஜீவசத்து!"

"அரிசிக்குப் பதிலாக காக்காட்டான் விதை!"

"பாஜ்ரா தூந்திருல் வடை செய்வது எப்படி?"

என்பது போன்ற தலைப்புகளைக் கண்டதும் அவருக்குச் சிரிப்பு பீறிட்டுக் கொண்டு வருகிறது.

அடுத்தபடியாக ஸ்ரீமான் அரிசி ஒரு வைதிகர் வீட்டில் (உமிச் சட்டையைக் கழற்றி வெளியே போட்டு விட்டு) வைதிகமாக நுழைகிறார்.

"ஆபாணூர்த்தம் அக்ஷதாம்......" என்று வைதிகர் ஆரம்பிக்கிறார்.

"அக்ஷதைதான் 'இல்லை' என்று முட்டிக் கொள்ளுகிறேனே, கோதுமையைப் போடுங்கள்!" என்று கத்துகிறாள் வைதிகரின் மனைவி.

"கோதுமாம் சமர்ப்பயாமி!......உபவீதார்த்தம் கோதுமாம் சமர்ப்பயாமி......" என்று கோதுமையினால் அர்ச்சனை செய்துகொண்டே வந்த வைதிகரின் கண்ணில் ஸ்ரீமான் அரிசி சிக்குப்பட்டுவிடுகிறது. அவர் சந்தோஷத்துடன், "அடியே, இதோ, ஒரு முழு அக்ஷதை!" என்று கத்திக் கொண்டே, "ஆபரிபார்த்தம் அக்ஷதாம் சமர்ப்பயாமி......" என்று ஸ்ரீமான் அரிசியை எடுக்கப் போகிறார்.

திகில் அடைந்த ஸ்ரீமான் அரிசியார், "செத்தேன், பிழைத்தேன்!" என்று விழுந்தடித்துக் கொண்டு வெளியே ஓடிவந்து விடுகிறார்!



யசோதரா

ஆசிரியர் : **விச்வம்பரநாத் கௌசிக்**
மொழிபெயர்ப்பு : **ரா. வீழிநாதன்**

மனோஹர் சத்திரத்தை அடைந்து ஜமீன்தாரிடம் "சந்துவைக் காணோம்" என்றான்.

"காணோமா? ஏன்? எங்கேயாவது ஓடிவிட்டானா?" என்று ஆத்திரத்துடன் கேட்டார் ஜமீன்தார்.

"அதெல்லாம் ஒன்றுமில்லை; வெளியில் ஏதோ வேலையாகப் போயிருக்கிறானாம்."

"சிறிது நேரம் இருந்து, பார்த்துக் கொண்டு வரக்கூடாதோ?"

"வேலையாகப் போனவன் எப்பொழுது வருகிறானோ, யார் கண்டது? நாளைக்குக் காலையில் மறுபடியும் போய்ப் பார்த்து வருகிறேன்."

"நாளைக்குப் போவானேன்! இன்றே சாயந்திரம் ஒரு நடை போய்ப் பார்த்துக் கொண்டு வா!"

"சரி, சாயந்திரமே ஒரு நடை போகிறேன்."

சந்துவைப் பார்க்கப் போவதாக ஜமீன்தாரிடம் கூறிவிட்டு, மனோஹர் மாலையில் ஊரைச் சுற்றிப் பார்க்கப் போய்விட்டான். திரும்பி வந்ததும், ஜமீன்தார் "சந்துவைப் பார்த்தாயா?" என்று கேட்டார்.

"இல்லையே!"

"இதென்ன, வேடிக்கையாக அல்லவா இருக்கிறது! காலையில் பார்க்கப் போன பொழுதும் இல்லை, இப்பொழுதும் இல்லை என்றால் என்ன அர்த்தம்? எங்கேயாவது ஓடித்தான் போயிருப்பானோ?" என்று மிகவும் கவலையுடன் கேட்டார் ஜமீன்தார்.

"அடாடா, என்ன மாமா இது! இல்லாததெல்லாம் எண்ணுகிறீர்களே?" என்றான் மனோஹர்.

"ஆமாம், பெண்ணையாவது அழைத்துக் கொண்டு வரக்கூடாதோ?" என்று கேட்டாள் ஜமீன்தாரிணி.

"முன்பின் தெரியாத ஒரு ஆண் பிள்ளையோடு ஒரு பெண் வருவாளா, அல்லது அவர்கள்தான் அனுப்புவார்களா, மாமி?" என்றான் மனோஹர்.

"மனோஹர் சொல்வது நியாயம்தானே? மெதுவாக ராத்திரிப் பொழுதைக் கழித்து விட்டால், நாளைக் காலையில் நானே நேரில் போய் அழைத்துக் கொண்டு வந்து விடுகிறேன்" என்றார் ஜமீன்தார்.

"ஆமாம், நீங்கள் போகாவிட்டால் காரியம் சீக்கிரம் நடக்காதுதான்!" என்றாள் ஜமீன்தாரிணி.

மறுநாள் காலை எட்டு மணிக்கு ஜமீன்தார் புறப்பட ஆயத்தமானார். "ஏன் மாமா, சாயந்திரம் போகலாமே! இப்பொழுதே என்ன அவசரம்?" என்றான் மனோஹர்.

"வந்து இரண்டு நாளாகி விட்டது. வந்த காரியத்தைப் பார்க்கவில்லை என்றால் என்ன அர்த்தம்? இப்பொழுதே போய்த்தான் ஆகவேண்டும்" என்றார் டாகுர்.

மனோஹருக்கு ஒன்றும் பதில் சொல்ல முடியவில்லை. "சந்து குறிப்பிட்ட சமயத்தில் போனால் எங்கேயாவது ஒளிந்து கொண்டாலும் ஒளிந்து கொண்டு விடுவான். 'திடுதிப்'பென்று போனால், அவனால் ஒளிந்து கொள்ள முடியாதல்லவா? இது தான் சரி" என்று மனதைச் சமாதானப் படுத்திக்கொண்டு அவனும் புறப்படத் தயாரானான்.

வெள்ளைப் பைஜாமா, நீல நிற 'அல்பாக்' கோட்டு, தோளில் பட்டு அங்கவஸ்திரம், தலையில் பட்டுத் தலைப்பாகை, காலில் முன்

க்கம் வளர்ந்து நிமிர்ந்து நிற்கும் கனத்த மீசையோடு, கையில் ஒரு தடி, அவரது கோட்டின்மீது ஓடி பைக்குள் மறைந்து இருந்த கடிகாரச் சங்கிலி — இவ்வித அலங்காரத்துடன் ஜமீன்தார் சந்துவைப் பார்க்கப் போவதற்கு ஆயத்தமானார்.

அவருக்கு முன்னாலேயே வெள்ளைத் துணி, வெள்ளைச் சட்டை, சிவப்புத் தலைப்பாகை, சிவப்பு காடாவில் வைத்துத் தைக்கப்பட்ட 'பில்லை', கால்களில் கிராமத்து வார்ச் செருப்பு முதலியன அணிந்துகொண்டு கையில் துப்பாக்கியையும் வெடி மருந்தையும் ஏந்திய வண்ணம் ஒரு சேவகன் புறப்படத் தயாராக நின்றான்.

மனோஹரர் வந்ததும், இந்தக் கோலத்தில் ஜமீன்தார் தன் பின்னே சந்துவைக் காணப் புறப்பட்டார்.

11

ராமநாத பாபு தமது அறைக்கு வெளியே யிருந்த வராந்தாவில் உட்கார்ந்து ஆங்கிலப் பத்திரிகை ஒன்றைப் படித்துக் கொண்டிருந்தார். அச்சமயம் அவரது வீட்டு வாசலில் ஒரு வண்டி வந்து நின்றது. அதிலிருந்து மூன்று பேர் இறங்கினர். ராமநாத பாபு அவர்களைப் பார்த்ததுமே, 'கிராமத்துத் தனவந்தர்கள் போலிருக்கிறது' என்று ஊகித்துக்கொண்டார். அவர்கள் மெதுவாக அங்கு மிங்கும் பார்த்த வண்ணம் யோசனையுடன் உள்ளே நுழைந்தனர். ராமநாத பாபுவைப் பார்த்ததும் கிழவர் நேரே அவரிடம் வரலானார். அவர் வருவதைக் கண்ட ராமநாத பாபு எழுந்து வணக்கத்துடன் உட்காருமாறு சொன்னார். கிழவரும் மற்றொருவரும் நாற்காலிகளில் உட்கார்ந்தார்கள். துப்பாக்கியுடன் வந்த சேவகன் பக்கத்தில் நின்று கொண்டிருந்தான். ராமநாத பாபு கிழவரை உற்று நோக்கினார். கிழவரது தலை நரைத்திருந்தது. முகத்தில் அவ்வளவாகச் சுருக்கம் விழவில்லை. நீண்ட அகன்ற கண்கள்—அதிலே சிவந்த சிறு கோடுகள். முகத்திலே ஒருவித காம்பீரியமும், மாட்சிமையும் ஒளி வீசியது. கிழவரது அந்தத் தோற்றம் ராமநாத பாபுவை வெகுவாகக் கவர்ந்து விட்டது. மிகுந்த வணக்கத்துடன், "தாங்கள் எங்கிருந்து வருகிறீர்களோ?" என்று கேட்டார்.

"நானா? அலகாபாத் ஜில்லாவிலுள்ள ஒரு கிராமத்திலிருந்து வருகிறேன்" என்று பதில் அளித்தார் கிழவர்.

அலகாபாத் ஜில்லா என்ற பெயரைக் கேட்டதுமே, ராமநாத பாபுவின் உள்ளத்தில் ஒருவித உணர்ச்சி ஏற்பட்டது. உணர்ச்சியின் வேகத்தை அடக்கிக் கொண்டு, "உங்கள் பெயர் என்னவோ?" என்று கேட்டார்.

"என் பெயரா? அர்ஜுன் ஸிங்."

"அப்படியா? நீங்கள் சந்துவின் தகப்பனார்தானே?"

"ஆமாம்" என்று சிறிது சங்கோசத்துடன் பதில் அளித்தார் கிழவர்.

ராமநாத பாபு, கிழவரையும் அவரது காம்பீரியத்தையும் கண்டு, "சந்து உண்மையிலேயே உயர்குலத்தவன்தான். அவன் சொன்ன மாதிரியே பெரிய பணக்காரனும் கூட" என்று மனத்துள் கூறிக்கொண்டார்.

ராமநாத பாபு மௌனமா யிருப்பதைக் கண்ட கிழவர், "சந்து உங்களிடம் வேலை பார்க்கிறான் என்று கேள்விப்பட்டேன். அவனை அழைத்துக் கொண்டு போகலாம் என்று வந்தேன். இருபத்தைந்து வருஷங்களுக்கு முன்னால் வீட்டை விட்டு ஓடி வந்தவன். இப்பொழுதுதான் அவன் முகத்தைப் பார்க்கப் போகிறேன்!" என்றார்.

"எனக்கு எல்லாம் தெரியும். சந்துவே என்னிடம் எல்லாவற்றையும் சொல்லியிருக்கிறான்" என்றார் ராமநாத பாபு.

"உங்களுக்குத் தெரியுமா! அப்படியானால் நான் மறுபடியும் சொல்லுவானேன்?—சந்து எங்கே இருக்கிறான்?"

எலியும் பூனையும்!



"பூனைமாதிரி சத்தமில்லாமல் வந்து இங்கே என்ன பார்க்கிறேனாம்?"

"இங்கே, எலி எதையோ உருட்டுகிற மாதிரி சத்தம் கேட்டது; அதைப் பார்க்கத்தான் வந்தேன்!"

கஷ்டமில்லை!



"கல்லுக்குக் கஷ்டமாயிருக்கும் இந்தக் காலத்தில் பாக்கிக் கட்டிடத்தை எப்படித்தான் பூர்த்தி செய்யப் போகிறீர்களோ?"

"அதற்கென்ன, ஆறுமாதம் ரேஷன் அரிசியில் கிடைக்கும் கல்லைப் பொறுக்கி வெடுத்துக் கொண்டால் கட்டிடத்தை முடிக்கப் போதுமே!"

"ஒரு வேலையாக அனுப்பியிருக்கிறேன். இதோ வந்துவிடுவான். உங்களுக்கும் அவன் அம்மாவுக்கும் ரொம்ப சிரமமாயிருக்கிருக்கும்."

"பின்னே இப்படிப் போய்விட்டால் அப்பா - அம்மாவுக்கு ஏது சுகம்?"

"வாஸ்தவம்" என்று ராமநாத பாபு கூறிக் கொண்டிருக்கும்பொழுதே அவரது தந்தையும் அங்கு வந்து சேர்ந்தார். தந்தையைக் கண்டதும் ராமநாத பாபு எழுந்திருப்பதைக் கண்ட அர்ஜுன் ஸிங்கும் எழுந்து, அவருக்கு வணக்கம் தெரிவித்தார்.

தகப்பனார் பேச வாய் எடுப்பதற்கு முன்பாகவே, "அப்பா, இவர்தான் டாகுர் அர்ஜுன் ஸிங். சந்துவின் அப்பா!" என்றார் ராமநாத பாபு.

ஸியாமநாத பாபு எல்லாரையும் ஒரு தடவை பார்த்துவிட்டுப் புன்முறுவலுடன், "நீங்கள் எப்பொழுது வந்தீர்கள்?" என்று கேட்டார்.

"நாங்கள் வந்து இரண்டு நாட்களாகி விட்டன. ஆனால் இன்றுதான் உங்கள் வீட்டுக்கு வருகிறோம்" என்றார் டாகுர்.

ஸியாமநாத பாபு ஒரு நாற்காலியில் அமர்ந்த வண்ணம் "உட்காருங்கள். நீங்கள் என்ன, ஜமீன்தாரா?" என்று கேட்டார்.

"ஆமாம்" என்றார் டாகுர் அர்ஜுன் ஸிங்.

"உங்கள் பையன் என் வீட்டிலே இருபது ரூபாய்ச் சம்பளத்துக்கு வேலை பார்க்கிறானே என்றுதான் எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது. ஏதாவது வீட்டிலே சண்டை கிண்டை போட்டுக் கொண்டு ஓடி வந்து விட்டானோ என்னவோ?"

"ஆமாம்; இருபத்தைந்து வருஷத்துக்கு முன்னால் ஓடி வந்தவன் அவன்!"

"இருபத்தைந்து வருஷமாகவா? எங்கள் வீட்டிலே ஒரு வருஷமாகத் தானே இருக்கிறான்!"

"எங்கேயிருந்தானோ, கடவுளுக்குத்தான் தெரியும்!" என்றார் டாகுர்.

ஸியாமநாத பாபு, ராமநாத பாபுவைப் பார்த்து, "சந்து எங்கேயப்பா?" என்று கேட்டார்.

"ஒரு வேலையாக அனுப்பியிருக்கிறேன்; இதோ வந்து விடுவான்!"

"இந்த மாதிரி விஷயம் என்று எனக்குத் தெரியலே!... ஏனப்பா ராமு! உன்னிடம் ஏதாவது சொல்லியிருக்கிறானா, எப்பொழுதாவது?" என்று கேட்டார் ஸியாமநாத பாபு.

"சொல்லியிருக்கிறான்."

"நீ ஏன் என்னிடம் சொல்லவில்லை? சொல்லியிருந்தால் அவனை நான் வீட்டுக்கு அனுப்பி யிருப்பேன் அல்லவா? சரி; நீங்கள் அவனை வீட்டுக்கு அழைத்துக் கொண்டு போய்விடுங்கள்!"

"அதற்காகத்தானே நான் வந்திருக்கிறேன்! — ஆமாம், அவனுடைய பெண் எங்கே யிருக்கிறாள்? சற்றுக் கூப்பிட்டு அனுப்புங்களேன்" என்றார் டாகுர்.

வக்கீல், ராமநாத பாபுவைப் பார்த்து, "ஜ்யோத்ஸ்னாவைக் கூப்பிடு, அப்பா!" என்றார்.

"இதோ கூப்பிடுகிறேன்" என்று கூறிய வண்ணம் ராமநாத பாபு எழுந்தார்.

* * *

ராமநாத பாபு உள்ளே சென்று சம்பாவதியைக் கூப்பிட்டார்.

சம்பாவதி, "ஏன் அண்ணா?" என்று கேட்டவாறே வெளியே வந்தாள்.

"ஜ்யோத்ஸ்னா எங்கே இருக்கிறாள்?"

"எதற்கு அண்ணா?"

"அவளை அவளுடைய தாத்தா பார்க்க வந்திருக்கிறார் என்று சொல்லு!"

"அப்படியா? இதோ கூப்பிடுகிறேன்! — ஏ, ஜ்யோத்ஸ்னா! ஏ, ஜ்யோத்ஸ்னா!"

யசோதரா ஒரு அறையிலிருந்து வெளியே வந்தாள். ராமநாத பாபு நிற்பதைக் கண்ட

னும் தனது உடையைச் சரி செய்து கொண்டு, சம்பாவின் அருகில் வந்து நின்றாள்.

"உன் தாத்தா உன்னைப் பார்க்க வந்திருக்கிறாராம்!" என்றாள் சம்பாவதி.

"என் தாத்தா வந்திருக்கிறாரா!"

"ஆமாம், வெளியில் உட்கார்ந்திருக்கிறார்!" என்று கூறிவிட்டு சாகாந்த பாபு வெளியே சென்றார்.

சிறிது நேரத்திற்கெல்லாம் யசோதரா, வாசற் கதவண்டை வந்து, தன் தாத்தாவை ஆவலுடன் நோக்கினாள்.

அவளைப் பார்த்ததும் டாகுர் எழுந்து நின்று "வா அம்மா, வா!" என்று மிகுந்த வாத்ஸல்யத்துடன் அழைத்தார்.

யசோதரா மிகுந்த நாணத்துடன் டாகுரின் அருகில் வந்து நின்றாள். டாகுர் தமது பேத்தியின் ரூபலாவண்யத்தைக் கண்டு புளகாங்கிதமுற்றார்.

இதே சமயம் நந்து அங்கே வந்து சேர்ந்தான். தனது தந்தையும் மனோஹரும் உட்கார்ந்திருப்பதைக் கண்டு அவன் முகம் போன போக்கைச் சொல்லி முடியாது. டாகுர் அவனைக் கண்டதும் கையை நீட்டி "நந்து!" என்று அழைத்தார். அதற்குமேல் அவரால் பேச முடியவில்லை. நந்து ஓடோடியும் சென்று அவரது கால்களில் விழுந்து விசித்து விசித்து அழுதான்.


இந்தக் காட்சியைக் கண்ட அனைவரும் கல்லாய்ச் சமைந்து நின்றனர்.

"குழந்தாய், உன் குற்றத்தை நான் மன்னித்துவிட்டேன்; என் குற்றத்தை நீயும் மன்னித்துவிடு! நாம் அனுபவித்த கஷ்டத்திற்கு எல்லையில்லை. நீயும் ஊர் ஊராய் அலைந்தாய்; நானும் வீட்டிலே கிடந்து துடித்தேன். பழைய விஷயங்களை மறந்து ஊருக்கு வா! நிலபுலன்களை நீயே பார்த்துக் கொள். இனி என்னால் முடியாது" என்று தழுதழுத்த குரலில் கூறினார் டாகுர்.

பிறகு சிறிது நேரம் கழிந்து, வக்கீல் சியாமாகாந்த பாபுவிடம், "இவனை வீட்டுக்கு அழைத்துக் கொண்டு போக உத்தரவு கொடுங்கள்!" என்றார் டாகுர்.

"எனக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை. இது எனக்கு முன்பே தெரிந்திருந்தால்...?" என்று ஆரம்பித்தார் சியாமாகாந்த பாபு.

"அதெல்லாம் ஒன்றுமில்லை. முன்பின் தெரியாதவனை வேலைக்கு வைத்துக் கொண்



டீர்களே, அதே பெரிதல்லவா?'' என்றார் டாகுர்.

சியாமநாத பாபு நந்து நின்று கொண்டிருப்பதைப் பார்த்து, ஒரு நாற்காலியைக் காட்டி, அதில் உட்காரச் சொன்னார்.

"உங்கள் முன்னால் நான் நாற்காலியில் உட்காருவதா?'' என்றான் நந்து கை கூப்பிக்கொண்டு.

"இனிமேல் நீ என் வேலைக்காரன் இல்லை; சங்கோசப்படாமல் உட்காரு!'' என்றார் வக்கீல்.

"உட்காரு அப்பா, நந்து! நீயும் நம் சாதிப் பணக்காரன்; பெரிய மனுஷ்யன். கால வித்தியாசத்தினாலே எங்களிடம் வேலை பார்க்கும்படி ஆகிவிட்டது. உட்காரு!'' என்றார் ராமநாத பாபுவும்.

"நீங்கள் செய்த உதவியை அவன் மறக்க முடியுமா?'' என்றார் டாகுர்.

"அப்பா, இவர்கள் செய்த உபகாரத்தை என்னவென்று சொல்வது? உண்மையைச் சொல்லப் போனால், இவர்களால்தான் என்னை நீங்கள் மீண்டும் அடைந்தீர்கள், நானும் உங்களை அடைந்தேன்!'' என்றான் நந்து.

"உண்மை! செய் நன்றியை மறக்கவே கூடாது, வக்கீல் பாபு!—நான் வரட்டுமா?'' என்றார் டாகுர்.

"உட்காருங்கள், போகலாம். ராமு! இவர்களுக்கு ஆகாரத்துக்கு ஏற்பாடு செய், அப்பா!'' என்றார் வக்கீல்.

அவருக்குப் பிடித்தது!



"என்னுங்க, வெறும் தண்ணீரா வாங்கி வாங்கிக் குடிக்கிறீங்களே? ஏதாவது சாப்பிடுங்க!''
"அதெல்லாம் ஒன்றும் வேண்டாம்; இந்த ஹோட்டல்லே தண்ணீர்தான் எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு!''

டாகுர், "அதெல்லாம் வேண்டாம். வீண் சிரமம் எதற்கு?'' என்றார்.

"சிரமமா! நன்றாயிருக்கிறதே?'' என்று கூறி ராமநாத பாபு, அவர்களுக்கு ஆகாரத்துக்கு வேண்டிய ஏற்பாடு செய்ய ஒரு வேலைக்காரனை அனுப்பினார்.

"நீ போய்ப் புறப்படுவதற்குத் தயாராக வா, அம்மா! உன் பாட்டி உன்னைப் பார்க்க வேண்டும் என்று துடியாய்த் துடித்துக் கொண்டிருக்கிறாள்!'' என்று கூறினார் டாகுர்.

யசோதா மகிழ்ச்சியுடன் உள்ளே சென்றாள்.

சிற்றுண்டி அருந்தும்பொழுது ராமநாத பாபு "நீங்கள் எங்கே தங்கியிருக்கிறீர்கள்?'' என்று டாகுரைக் கேட்டார்.

"ஒரு சத்திரத்தில்!''

"சத்திரத்திலா! எதற்கு அங்கே? நம் வீட்டிலேயே வந்து தங்குங்கள்!'' என்றார் வக்கீல்.

"இருக்கப் போவதோ இரண்டொரு நாள். எதற்காக இன்று ஒரு நாம் வந்து உங்களுக்குச் சிரமம் அளிக்க வேண்டும்?'' என்றார் டாகுர்.

"ஏதோ பகவான் கொடுத்தது இருக்கிறது; நீங்கள் இங்கே வந்து தங்கினால் எங்களுக்கு ஒன்றும் சிரமமிராது!—நந்து, நீ போய் உன் அம்மாவை அழைத்துக் கொண்டு சீக்கிரமாக வந்து விடு!'' என்றார் வக்கீல்.

"சரி'' என்று கூறி நந்து புறப்பட்டான். டாகுரும் அவனுடன் புறப்பட்டார்.


"குழந்தையையும் அழைத்துக் கொண்டு வாயேன்'' என்றார் டாகுர்.

"எதற்கு? நீங்கள்தான் சிறிது நேரத்திற்கெல்லாம் வந்து விடப் போகிறீர்களே, அவள் இங்கேயே இருக்கட்டும்'' என்றார் ராமநாத பாபு.

"அதுவும் சரிதான்!'' என்று கூறி, நந்துவை அழைத்துக் கொண்டு கிளம்பினார் டாகுர்.

* * *

நந்து சத்திரத்துக்குச் சென்று இருபத்தைந்து வருஷ காலமாகப் பிரிந்திருந்த தாயைக் கண்டு கண்ணீர் வடித்த பிறகு, தாய் தந்தையருடனும் சாமான்களுடனும் மற்றவர்களுடனும் வக்கீலின் வீட்டுக்கு வந்து சேர்ந்தான். (தொடரும்)







டால்டாவில் வறுத்த பூரிகள் வாயில் கரையுகின்றன — மேலும் ஊக்கத்தையும் அளிக்கின்றன!

டால்டா உங்கள் தின்பண்டங்களை ருசியுள்ளதாகச் செய்யும் வஸ்து மட்டுமன்று — அதுவே ஊக்கமளிக்கும் உணவு! எளிதில் ஜீரணமாகக் கூடியதும், விடமின் நிரம்பியதுமான இச் சமையல்செய்ய உதவும் சாதனத்தின் அரிந்த சத்தையளிக்கும் திறமையைக் கொண்டு உங்கள் தினந்தோறுமுள்ள சாப்பாட்டைச் சீர்படுத்திக் கொள்ளுங்கள். டால்டா ஒவ்வொரு ஸ்திரீக்கும் ஒரு நன்கொடை — அது அவள் தயாரிக்கும் சாதாரண தின்பண்டங்களுக்கு விசேஷச் சுவையையளிப்பதோடு அவள் குடும்பத்திற்கு அதிகப்படியான ஊக்கத்தையும் கொடுக்கிறது.

★ ஆங்கிலத்தில் மட்டும் எழுதப்பட்டுள்ள டால்டா சமையல் புத்தகத்தின் உதவியுடன் உங்கள் சாப்பாட்டுத் திட்டத்தை அமையுங்கள். சத்தைத் தரும் திறமைக்கென ஆராய்ந்தெடுத்த சுவையுள்ள 150-க்கு மேற்பட்ட இந்தியத் தின்பண்டங்களைப் பக்குவம் செய்யும் முறைகள் இதில் அடங்கியிருக்கின்றன. உங்கள் புத்தகத்திற்கு Dept. A461 P.O. Box No. 353, Bombay, என்ற விலாசத்திற்கு நான்கு அணா ஸ்டாம்பு அனுப்புங்கள்.

HVM. 48-23 TM


THE HINDUSTAN VANASPATI MANUFACTURING CO., LTD.

நெஸில்ஸ் மால்டெட் மில்கே

நிறைந்த அளவு வைடமின் 'பி'

ஐ அளிக்கக்கூடிய நவீன மூலப்பொருள்

நெஸில்ஸ் மால்டெட் மில்க்கை தினம் அருந்துவது தேகாரோக்யத்தை வளர்க்கும் பழக்கம். உங்கள் சௌக்யத்திற்கு இவ் வழக்கம் இதற்கு முன் இருந்திராத வகையில் மிகவும் அவசியமாயிருக்கிறது. அதிக வைடமின் 'பி' இருப்பதால் நெஸில்ஸ் மால்டெட் மில்க் ருசிகரமான தேகாரோக்ய பானமாயிருப்பதுமன்றி தேகத்தை வளர்க்கும் உணவுமாகிறது.




S.-NM-5



Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
116-119, Sladens Garden, Poonamalle High Road, Kilpauk, Madras.

கல்கி



ALKI செப்டம்பர் 8, 1946 4 அணா



சைபால்
CYBOL
சைபால்
for
RING
WORM
SOUTH INDIAN M
முகப்பரு சேத்துப்
புண், சொக்கு வேனல் கட்டி, தீப்
பட்ட புண், காப்பான் முதலிய
வைகளுக்குக் கை கண்ட மருந்து
தயாரிப்பவர்கள்:
தி சௌத் இந்தியன் மானுபாக்சரிங் கம்பெனி, மதுரை



IODISAL
The best
BLOOD PURIFIER
MANUFACTURERS
SOUTH INDIAN MFG CO
MADURA
அயோடிசால்
மிகச் சிறந்த
ரத்த சுத்தி மருந்து
இது தேகத்தில் உஷ்ணம் அதி
கரித்து அதனால் ஏற்படும் ரோகங்களை
குணப்படுத்தி தேகத்திற்கு
ஆரோக்கியத்தைக் கொடுக்கும்.
ரத்தத்தை சுத்திசெய்து ரத்த விருத்தி
யையும் உண்டாக்கும்.
எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்
தயாரிப்பவர்கள்:
தி சௌத் இந்தியன் மானுபாக்சரிங் கம்பெனி
மதுரை

Regd. No. M. 439

பெரீஸ்

பேபி பிஸ்கட்ஸ்

குழந்தைகள்
குதூகலத்துடன்
விரும்புவது



Perry & Co., Usilampatti.

MENON'S

மதராஸ் விநி. ஏஜன்ட்ஸ்: சக்தி டிரேடிங் ஏஜன்ஸி
581, பைக்ராப்ட்ஸ் ரோடு, திருவல்லிக்கேணி, மதராஸ்